Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-1

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-06 | 23-10-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-248


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12956)

### வழமையான இராணுவ அச்சுறுத்தலையும் மீறி

# திருமலை தேசிய எழுச்சி மாநாட்டில் பல்லாயிரம் தமிழ் மக்கள் திரள்வு!

## தமிழர் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனவும் பிரகடனம்

(திருகோணமலை)

**திருமலை மாவட்டத்தில் வழமையாகவுள்ள இராணுவக் கெடுபிடிகளையும் மீறி தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் படங்களை ஏந்தியவாறு பல்லா யிரக்கணக்கான தமிழ் மக்கள் தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டனர். மிகவும் உணர்ச்சிகர மான இந்நிகழ்வில் தமிழர் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேற வேண் டும் எனப்பிரகடனமும் செய்தனர்.**



சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள துறைமுக வீதியில் அமைந்துள்ள இளையோர் விளையாட்டுத்திடலில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வு காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. முதலில் ஈகச்சுடரை மாவீரர் லெப். தர்மராஜின் தந்தை அன்ரனிஸ் ஏற்றினார். தமிழீழத்தேசியக் கொடியை மாவீரர் கஜேந்திரனின் தந்தை என். சிங்காரவேல் ஏற்றினார். பின்னர் பொதுச்சுடரேற்றப்பட்டது. எழுச்சிநாள் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் க. தங்கராசா நிகழ்வுகளுக்குத் தலைமை வகித்தார். வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக் கள், பௌத்த துறவி வண நந்தரத்தின தேரர் அருட்தந்தை சி.வி. அன்னதாஸ், ஏ.எச். சாகுல்ஹமீது ஆகியோர் ஆசியுரை வழங்கினர். அரங்கச் செயற்பாட்டுக்குழுவினரின் நிகழ்வின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்க

## வல்வெட்டித் துறையிலிருந்து மிதிவண்டியில் சென்ற இளைஞர்கள்

(திருகோணமலை)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையிலிருந்து மிதிவண்டியில் ஐந்து இளைஞர்கள் திருகோணமலையில் நடைபெற்ற தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வில் பங்குகொள்வதற்காக சென்றடைந்தனர்.

இவர்கள் அரங்கிற்கு சென்ற போது மக்கள் இவர்களுக்கு பாரிய ஆதரவு தெரிவித்து வரவேற்றுள்ளனர்.தமது எழுச்சிப் பயணம் குறித்து அந்த இளைஞர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; எமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை அடக்கி ஆளமுடியாது என்பதை சிங்களதேசத்திற்கு நாம் உணர்த்தியுள்ளோம்

### -தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வில் இரா. சம்பந்தன்

(திருமலை)

எமது போராட்டம் இன்று ஒரு இறுதிக்கட்ட நிலையில் நிற்கின்றது. காலம் காலமாக, சனநாயக வழியில், சாத்வீக வழியில், ஆயுத வழியில் நாம் எமது உரிமைகளுக்காகப் போராடி நின்றோம். தமிழர்களை எவராலும் அடக்கி ஆள முடியாது என்பதை நாம் இன்று நிரூபித்துள்ளோம். தமிழர்களை அடக்கி ஆளமுடியாது என்பதனைச் சிங்கள தேசமும் இன்று உணர்ந்துள்ளது. ஆனால் நியாயமான தீர்வுகள் கிடைக்கக்கூடாது என்பதில் அது மிக அக்கறையாகவே உள்ளது. இவ்வாறு திருமலையில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வில் உரையாற்றிய தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


## ஏ9.இல் இரு வாகன விபத்துக்கள்; ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பரந்தன் உமையாள்புரம் ஏ9 நெடுஞ்சாலையில் நேற்று இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு வாகனவிபத்தில் ஒருவர் பலியானதுடன் மற்றும் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி உந்துருளியில் பயணம் செய்த இருவரை பின்னால் வந்த பயணிகள் பேருந்து மோதியதில் உந்துருளியில் பயணித்தவர்கள் இருவரும் உந்துருளியிலிருந்து தூக்கிவீசப் பட்டதுடன் பேருந்து கட்டுப்பாட்டையிழந்த நிலையில் நெடுஞ்சாலையினை விட்டு விலகி வீதி அருகிலிருந்த பள்ளத்தில் பாய்ந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



(படம்-சோதி)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் யாழ். மீனவர் பிரச்சினைகுறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேற்று ஆராயப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகி சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இச்சந்திப்பில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், கடற்றொழில் திணைக்கள யாழ். மாவட்ட பிரதிப்பணிப்பாளர், கே. தர்மலிங்கம், யாழ். மாவட்ட மீனவ சங்கங்களின் தலைவர் க. தவரட்ணம், வடமராட்சி கிழக்கு மீனவ சங்கங்களின் சமாசத் தலைவர் க.சூரிய குமாரன் மற்றும் இலங்கை இராணுவத்தின் 51-2,52-4 படைப்பிரிவு அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

தற்போது மீண்டும் சர்ச்சைகளை கிளப்பியுள்ள பாஸ் நடைமுறைகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை எழுப்பிய மீனவ அமைப்புக்கள் இரவு வேளையில் மீனவர்கள் கரை திரும்புவதற்கான அனுமதியைப் படைத்தரப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# IMMEDIATE VACANCY

**Solidar**
AN INGO consortium including NPA,SAH and ASB

**Position: Field Monitors (4 Positions)**

Solidar is a consortium of organizations of 12 European Countries that supports a broad portfolio of projects.The Solidar network in Srilanka comprises of three international NGOs-Arbeiter Samariter Bund (ASB),NOrwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

TheField Monitors will follow up the daily progress of constuction on site.He/She will be responsible for assuring quality control of the construction works carried out by the subcontractors and prepare daily reports to the technical officer.

Interested candidates MUST posses the minimum requirements stated below. please send in your applications to reach us on or before 27 thOctober 2005.

**Qualifications**:

- A civil engineering/ architecture degree with a minimum of one year construction experience.
- Or a NDT or NCT with minimum 2 years construction supervision experience
- Or a background in construction supervision with minimum 6 years experience.
- Knowledge in English language is essential.
- Should be computer literate (Microsoft Word and Excel)

**Solidar, No.156 jaffna Road,Paranthan**

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V | Swiss Labour Assistance SAH

(சி-13050)

**03-10-2005 முதல் 01-11-2005 வரை**

SALE SALE SALE SALE

தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்
விசேட கழிவு
உடனே விஜயஞ்செய்யுங்கள்:

## லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381

தீபாவளித் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிறும், 30 ஆம்திகதி ஞாயிறும் விசேடமாக கடை திறந்திருக்கும். (சி-13090)


**சலுகை விலையில்**
யாழ்-கொழும்பு விமானக் கட்டணம்.

**சலுகை விலையில்**
கொழும்பு சென்னை விமானக் கட்டணம்.

லண்டனுக்கு 1 kg மிறுக்கு பார்சல் 600 ரூபா

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
MANOJ AIR TOURS PVT LTD
32 மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
0212223916 (சி.13111)

## 05 ஆம் ஆண்டு நினைவில்



ஈன்றவள் மடியில் 03 – 04 – 1975

ஈழத்தாய் மடியில் 23 – 10 – 2000

## லெப்.கேணல் சேகர்

**(மாயாண்டி ஜெயக்குமார்)**
சாள்ஸ் அன்ரனி சிறப்புத்தளபதி
**இல.21, யூனியன்குளம், கோணாவில்.**

சங்கத் தமிழ் தலைவன்
தன்னிகரில்லா எம் தலைவனின் சேனையில்
தமிழ் பங்கம் விளைவித்த பகைவனை விரட்ட
களம் குதித்த எம் இனிய சகோதரனே!
எம் தாயில்லா துயரை நீக்க
தலைவன் சேனையில் இணைந்து
வீரத்தை உலகிற்குச் சொல்லி

தமிழனின் வீரத் திருவேட்டில் காவியமாகி
ஐந்தாண்டு எட்டும் வேளையில்
உன் தனிமையை போக்க-உன்
அப்பாவையும் அழைத்தாயோ!
நித்தம் உன் நினைவில் இருக்கும் எமக்கு
இரு மாதம் முடிவுற்றிருக்கும் அவரது
சோகமும் இணைந்தே வாட்டுதய்யா! எமக்கு!

(6875)

**அண்ணா. மா. உதயகுமார்.**

## கலந்துரையாடல்

வன்னிப் பகுதியில், காப்புறுதிச் செயற்பாட்டிலீடுபட விரும்பும் காப்புறுதி நிறுவனங்களுடன், கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். காப்புறுதிச் செயற்பாட்டிலீடுபட விரும்பும் காப்புறுதி நிறுவனங்களின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கலந்துரையாடல் நடைபெறும்:

நாள் :2005.10.27 (வியாழக்கிழமை)
நேரம் :காலை 10.00 மணி
இடம் :வருவாய்ப்பகுதிச் செயலகம்,கிளிநொச்சி
(யாழ்.சாலை கிளிநொச்சி)

வருவாய்ப்பகுதி,
நிதித்துறை. (6423)

## நன்றி நவில்கின்றோம்

திரு. சபாபதி கந்தசாமி (ஓய்வு பெற்ற உபதபாலதிபர்) அவர்களின் சாவுச்செய்தி கேட்டு வந்து 20.10.2005 அன்று வந்து கலந்து கொண்டவர்களுக்கும், முன்னின்று பணி செய்த போராளிகள், பணியாளர்கள் மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் வழங்கியவர்களுக்கும், ஆசிரியர்கள், மாணவர்களுக கும், நோயுற்றவேளை பெரிதும் உதவிய கிளி/மாவட்ட வைத்திய சாலைப் பொறுப்பாதிகாரி, 3ஆம் விடுதி வைத்தியர், பணியாளர் களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.35-கனகபுரம் -
கிளிநொச்சி. (சி.13108)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

## சாவு அறிவித்தல்

**ஜெராட் மாசிலாமணி (செல்வம்)**

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இல 36B திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெராட் மாசிலாமணி (செல்வம்) கடந்த 22.10.2005 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நெல்லியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிகொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்,
மனைவி கிறிஸ்ரி,
திருநகர்,
கிளிநொச்சி.

(சி.13096)

ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

**பாடசாலையில் ஆசிரியர்களுக்கான நேரமுகாமைத்துவம்**

வாசியுங்கள்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

## அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

# பாகிஸ்தான் பூகம்பத்தில் ஒசாமா இறந்தாரா

# அமெரிக்க, பிரிட்டன் படைகள் குழப்பத்தில்

(இஸ்லாமபாத்)




**பாகிஸ்தானில் பூகம்ப மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடக்கும் போதும் அமெரிக்க, பிரிட்டன் கூட்டணிப் படைகள் சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனைத் தேடி வருகின்றன. பூகம்ப இடிபாடுகளில் சிக்கி ஒசாமா இறந்து விட்டாரா என்பதைக் கண்டறியவே இந்தத் தேடுதல் நடப்பதாகத் தெரிய வருகிறது.**

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய வடமேற்கு எல்லை மாகாணத்தில் தான் ஒசாமா தங்கியிருப்பதாக கூறப்படுகின்றது. அதனால் அங்கு அடிக்கடி பாக். படையினர் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

ஒசாமா பின்லேடன் பதுங்கிருப்பதாகக் கூறப்பட்ட ஆப்கான் எல்லையை ஒட்டிய மலைப் பகுதிகளும் பூகம்பத்தில் பாதிக்கப்பட்டன. இதனால் பூகம்பத்தில் சிக்கி பின்லேடன் பலியாகி விட்டாரா அல்லது இன்னும் உயிருடன் இருக்கின்றாரா என்ற புதுக் குழப்பம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வரும் அமெரிக்க இராணுவப் படையினர் மத்தியீல் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதி நவீன புகைப்படக் கருவிகளையும், தொழில்நுட்ப சாதனங்களையும் வைத்து இவர்கள் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இந் நிலையில் பிரிட்டன் 'சண்டே எக்ஷ்பிரஸ்' என்ற நாளிதழ் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. அதில் பூகம்பம் ஏற்படுவதற்கு முந்தைய நாள் அமெரிக்க செயற்கை கோள் படத்தில் எளிதில் சென்றடைய முடியாத மலைப்பகுதியில் அல்ஹைதா தீவிரவாத முகாம் ஒன்று தெரிகிறது. அதில் ஒசாமா பின்லேடனைப் போலவே காட்சியளிக்கும் ஒரு நபரின் முகம் தெரிகிறது. மிகவும் மெலிந்த நிலையில் காணப்படும் இவர் ஒசாமா தானா அல்லது வேறு யாருமா என்று தெரியவில்லை என அமெரிக்க அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானில் முஷபராபாத் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தால் அகதியாக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெறுவதற்காகக் காத்திருக்கின்றனர்.

## சிறுவர்களை ஆசிரியர்கள் பிரம்பால் அடித்து தண்டிக்கலாம்

## இங்கிலாந்தில் புதிய சட்டம் ஆசிரியர்கள் வரவேற்பு

(லண்டன்)

பாடசாலைகளில் ஒழுங்கீனமாகவும் முரட்டுதனமாகவும் நடக்கும் சிறுவர்களை ஆசிரியர்கள் பிரம்பால் அடிக்கலாம் என்று இங்கிலாந்தில் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் பாடசாலைக்கு வரும் மாணவர்களிடம் ஒழுங்கீனம் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவில் சிறு குழந்தைகள் கூட பாடப்புத்தகத்துடன் துப்பாக்கியை கொண்டு வருகிறார்கள். இங்கிலாந்திலும் இதே நிலை தான்.

ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் குழந்தைகளிடம் கண்டிப்பாக நடந்து கொள்ளாததே ஒழுங்கீனத்துக்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

குழந்தைகள் எதிர்த்து பேசினாலோ முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலோ அவர்களை ஆசிரியர்கள் இனி பிரம்பால் அடிக்கலாம்.

ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் குழந்தைகளுக்கு ரூபா250 வரை அபராதம் விதிக்கப்படும். குழந்தைகளை பெற்றோர் ஒழுக்கத்துடன் வளர்க்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை என இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. குழந்தைகளை அடிக்க அனுமதி வழங்கும் புதிய சட்டத்தை ஆசிரியர்கள் வரவேற்றுள்ளனர்.

## மெக்சிக்கோவை 'வில்மா' புயல் தாக்கியது

## இன்று புளோரிடாவை தாக்கலாம்

(மெக்சிக்கோ)

அமெரிக்காவை கடந்த சில வாரங்களுக்கு முன்பு கற்றினா, றீற்றா என்ற புயல்கள் அடுத்தடுத்து தாக்கிப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இந்தப் புயல் பாதிப்பில் இருந்து அமெரிக்க மக்கள் முழுவதும் மீளாத நிலையில் கரீபியன் கடல் பகுதியில் 'வில்மா' என்ற இன்னொரு புயல் உருவானது.



இந்தப் புயல் ஹைத்தி மற்றும் கியூபாவைத் தாக்கியது. கியூபாவின் கடற்கரைப் பகுதிகளில் புயல் காரணமாக தொடந்து பலத்த மழை பெய்து கொண்டிருக்கின்றது. ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கடற்கரைப் பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

அடுத்து இந்த 'வில்மா' புயல் மெக்சிக்கோவின் கடற்கரை நகரங்களை தாக்கியது. அங்குள்ள கோஸ்பல் தீவுப் பகுதியில் இந்தப் புயல் கடும் சேதத்தை ஏற்படுத்தியது. மரங்கள் வேருடன் சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன. கடலில் இராட்சத அலைகள் எழுந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்தது.

பலத்த புயல் மழைக்கு இதுவரை 10 பேர் பலியாகி விட்டனர். வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் தூக்கி வீசப்பட்டன. மணிக்கு 230 கி.மீ வேகத்தில் காற்று சுழன்று அடித்தது.

இந்தப் புயல் இப்போது அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. இன்று அது புளோரிடா கடற்கரையை தாக்கும். ஆனால் புயல் இப்போது சற்று வலுவிழந்திருக்கின்றது. அத்தோடு புயல் திசைமாறினால் புளோரிடா புயல் பாதிப்பில் இருந்து தப்ப வாய்ப்புள்ளது.



அமெரிக்காவின் ஆர்லான்டோ நகரில் டொல்பின் தினத்தை முன்னிட்டு கடல் வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு நிபுணர்களிடம் பயிற்சி பெறும் மாணவர்கள்.

## போரில் இறந்த இராணுவத்தினரை விட பூகம்பத்தால் இறந்த இராணுவத்தினர் அதிகம்

### பாக். வர்த்தக அமைச்சர்

(இஸ்லாமபாத்)

1965 ஆம் ஆண்டு போரில் இறந்த வீரர்களை விட பூகம்பத்தில் இறந்த வீரர்கள் அதிகம் என பாக். வர்த்தக அமைச்சர் ஹுமாயூன் அக்தர் கான் தெரிவித்துள்ளார்.

பாக். பூகம்பத்தில் இராணுவ வீரர்கள் ஏராளமானோர் பலியாயினர். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்ற முழு விபரத்தை பாக். வெளியிடவில்லை. இந்நிலையில் பாகிஸ்தானில் நிவாரண நிதி வழங்கும் நிகழ்வில் பேசிய வர்த்தக அமைச்சர் ஹுமாயூன் அக்தர் கான் கூறுகையில் 1965 ஆம் ஆண்டு போரில் இறந்த இராணுவ வீரர்களை விட பூகம்பத்தில் இறந்த இராணுவ வீரர்கள் அதிகம் எனக் குறிப்பிட்டார்.'

பாக். பூகம்ப நிவாரணப் பணிகளில் வெளிநாட்டுக் குழுவினர் பலர் ஈடுபட்டுள்ளனர். பூகம்பம் ஏற்பட்டு இரண்டு வாரம் ஆகியும் இன்னும், அங்கு நிலைமை சீரடையவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## பிரிட்டனின் பட்டத்து இளவரசர் இராணுவத்தில் சேரத் திட்டம்

(லண்டன்)

பிரிட்டனின் பட்டத்து இளவரசர் வில்லியம் அடுத்த ஆண்டு இராணுவத்தில் சேரத் திட்டமிட்டுள்ளார்.

பிரிட்டனின் இளவரசர் சார்ள்ஸ்-டயனா தம்பதியின்ருக்குப் பிறந்த குழந்தை வில்லியம் -23 வயதுடைய வில்லியம் ஸ்கொட்லாந்தில் உள்ள செயின்ட் ஆண்ட்ரூ பல்கலைக்கழகத்தில் புவியியல் பட்டப்படிப்பு படித்து வருகிறார். இந்த ஆண்டுடன் இவருடைய படிப்பு முடிவடைகிறது. அதன் பின் வில்லியம் இராணுவத்தில் சேர வேண்டும் என விரும்புகிறார். இதற்காக தொடக்கத் தேர்வை எழுதினார். அதிலும் தேறி விட்டார். சென்ட் ஹர்ஸ்ட் என்ற இடத்தில் உள்ள இராணுவப் பயிற்சி மையத்தில் அடுத்த ஆண்டு சேரத் திட்டமிட்டுள்ளார்.

இராணுவத்தில் எனக்கென தனிச் சலுகை எதனையும் கோர மாட்டேன். பயிற்சி மையத்தில் தனிச் சலுகைகள், அளிக்கப்பட்டாலும் ஏற்க மாட்டேன். மற்ற பயிற்சியாளர்கள் என்ன செய்கிறார்களோ அதையே நானும் செய்வேன். அவர்கள் தங்கியிருக்கும் இடத்தில் தான் நானும் தங்கியிருப்பேன் என்கிறார் வில்லியம்.

## 63ஆண்டுகளின் பின்னும் அழுகாமல் கிடந்த இரண்டாம் உலகப் போர் இராணுவ வீரனின் சடலம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் சீரா நிவேடா பகுதியில் ஏராளமான பனி மலைகள் உள்ளன. இந்தப் பனிமலைச் சிகரம் ஒன்றில் இராணுவ வீரர் ஒருவரின் உடல் கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்த உடலைக் கைப்பற்றி மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்ட இராணுவ வீரரது உடல் இது என்பது தெரியவந்தது.

1942 இல் இந்தப் பகுதிக்கு வந்த இராணுவ விமானம் நொருங்கி விழுந்தது. அந்த விமானத்தில் இருந்த அமெரிக்க வீரரின் உடல் பனிக்கட்டியில் புதைந்து இன்னும் கெடாமல் அப்படியே கிடந்தது. அவர் அணிந்திருந்த சீருடையும் அப்படியே இருந்தது. அவரது எலும்புகள் உடைந்திருந்தன. ஆனால் அவரது பெயர் என்ன என்று இன்னும் அடையாளம் கண்டு பிடிக்கப்படவில்லை.

## பாக்.நிவாரணப் பணிக்கு கியூபா மருத்துவ உதவி

(இஸ்லாமபாத்)

பாக். பூகம்ப நிவாரணப்பணிக்கு கியூபா ஏற்கனவே 100 பேர் அடங்கிய மருத்துவக் குழுவை அனுப்பிவைத்தது. மக்களின் நிலைமை மோசமாக இருப்பதால் மேலும் 100 பேர் அடங்கிய மருத்துவக்குழுவை கியூபா அனுப்பியுள்ளது. விமானத்தில் 26 மணிநேரம் பயணம் செய்து இந்தக்குழுவினர் பாகிஸ்தான் சென்றுள்ளனர். இவர்கள் மூன்று மாதம் தங்கி பாக்.மக்களுக்கு சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு செஞ்சிலுவைச் சங்கம் 53 ஆயிரம் துணிக் கூடாரங்களையும், ஐ.நா.30 ஆயிரம் கூடாரங்களையும் அனுப்பியுள்ளது. இன்னும் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் கூடாரங்கள் பாகிஸ்தானுக்கு தேவைப்படுகின்றது.



நேற்று முன்தினம் தமிழகம் கோவையில் இரு பயணிகள் பேருந்து நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் நான்கு பேர் பலியாகினர். இவ் விபத்தில் சிக்கிய பேருந்தினையே படத்தில் காணலாம்.



பல வருடகாலமாக உருத்திரபுரம் டி8 பகுதியில் சிதைவுற்ற நிலையிலிருந்த மண் அணையினை பாரிய இயந்திரத்தின் உதவியுடன் செப்பனிடும் பணிமேற்கொள்ளப்படுவதனையும் அப்பிரதேச மக்களினால் சிரமதானப்பணிமூலம் பற்றைக்காடுகள் அழிக்கப்படுவதையும் படத்தில் காணலாம். (படங்கள்-சோதி)

# பொதுச்சந்தையின் சீர்கேட்டை உடன் நிவர்த்தி செய்க!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மக்கள் சந்தையில் நீர் தேங்கி நின்று நிலம் சதுப்பு உண்டாகி, கழிவுப் பொருட்கள் அதனுடன் சேர்ந்துள்ளதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் சூழ்நிலை உள்ளதால் தாம் வியாபாரத்தை மேற்கொள்வதில் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளதாக வியாபாரிகள் எமது புதுக்குடியிருப்பு செய்தியாளரிடம் குறிப்பிட்டனர்.

இந்நிலையினைச் சம்பந்தப்பட்டவர்கள் பார்வையிட்டுள்ளபோதும் ஏற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எது எவ்வாறாக இருந்தபோதும் உடன் இதற்கு ஏற்றநடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை தற்போது உள்ளது. (08)

# சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் பெ.அ.பு.நிறுவன பணிப்பாளர் மா.வினோ தலைமையில் கோணாவில் பொதுமண்டபத்தில் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு ஆரம்பமானது. அவர் தனதுரையில் திட்டச் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்துகொண்டதுடன் கிராம அலுவலர், பெ.அ.பு.நிறுவன உத்தியோகத்தர் க.றஞ்சினி ஆகியோர் தொழில்களின் முக்கியத்துவம் திட்ட நடைமுறைகள் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதுடன் கோரக்கன்கட்டு, கோணாவில், யூனியன்குளம் ஆகிய கிராமங்களில் இருந்து 15 பயனாளிகளுக்கு மொத்தமாக ஒரு இலட்சம் ரூபா கால்நடை வளர்ப்பு, தோட்டம், வியாபாரம் போன்ற தொழில்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவன உதவியுடன் வழங்கப்பட்டது.

அத்துடன் யு.என்.பி.நிறுவன உதவியுடன் மாசார் கிராமத்தில் சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு மாசார் பொது மண்டபத்தில் பிரதேச இணைப்பாளர் ச.சசிரேகா தலைமையில் ஆரம்பமானது. தொடர்ந்து பெ.அ.பு.நிறுவன மாவட்ட பணிப்பாளர் மா.வினோ.கிராம அலுவலர் ஆகியோர் திட்ட நடைமுறைகள், தொழில்கள் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதுடன் 11 பயனாளிகளுக்கு மொத்தமாக 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதி கடனாக கால்நடை வளர்ப்பு, தோட்டம், வியாபாரம் போன்ற தொழில்களுக்கு வழங்கியதுடன் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

## கல்குடா கல்வி வலயத்தில்

# இடைவிலகிய 400 மாணவர்களை பாடசாலைகளில் இணைக்க முயற்சி

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்விவலய பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய 400 மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்குடா கல்வி வலயதிட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.**

கடந்தகால யுத்த அனர்த்தம் காரணமாக கல்குடா கல்விவலய பாடசாலைகளில் இருந்து சுமார் 6625 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யுனிசெவ் நிறுவனம். இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் என்பனவற்றின் உதவியுடன் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் 1573 மாணவர்கள் கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆறாம் தரத்திற்கு மேற்பட்ட வகுப்புக்களில் 567 மாணவர்களும் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். மேலும் 400 இடை விலகிய மாணவர்களை புதிதாக பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வகுப்புக்கள் எதிர்வரும் சனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# விவசாய ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்த கிளிநொச்சியில் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத்திற்கான பிராந்திய அலுவலகம் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களுடன் தொடர்புகொண்டபொழுது அவர் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த செப்ரெம்பர் 20ஆம் திகதி வரை கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலிருந்து 603 விவசாயிகளும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலிருந்து 305 விவசாயிகளும், பூநகரி பிரதேச செயலர் பிரிவிலிருந்து 105 விவசாயிகளும், பச்சிலைப்பள்ளி,பளை பிரதேசத்திலிருந்து 76 விவசாயிகளுமாக மொத்தம் 1089 விவசாயிகள் விவசாய ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்துள்ளனர்.

எனவே விவசாய ஓய்வூதியத்தில் விவசாயிகளை இணைத்துக்கொள்ளும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடமாடும் சேவை நடத்தப்பட வேண்டுமெனவும் அத்துடன் விவசாய ஓய்வூதியத்திற்கான பிராந்திய அலுவலகம் ஒன்று கிளிநொச்சி மாவட்டத்தில் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் விவசாய ஓய்வூதியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (சோ)

# சுயதொழில் மேம்பாட்டிற்காக பெண்களுக்கு பயிற்சி வகுப்பு

(உடையார்கட்டு)

முள்ளி வாய்க்கால் கிழக்கு பாடசாலையில் கடந்த செவ்வாயன்று 10.00 மணிக்கு உலக உணவு நிறுவன அதிகாரி தலைமையில் இப்பகுதி பெண்களுக்கான பயிற்சி வகுப்பு இடம்பெற்றது.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பதனிடல் புதிய முறையில் உணவுகளைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி வகுப்பில் பயிற்சி வகுப்பிற்கான கருத்துரையை உலக உணவு நிறுவனமுல்லை இணைப்பாளர், விவசாய போதனாசிரியர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆகியோர் வழங்கினர். (19)

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு பதிவுசெய்தல்

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தால் 2005/2006 ஆம் கல்வியாண்டில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியினைப் பயில்வதற்காக கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான பதிவு செய்தல் நடவடிக்கைகள் இன்று காலை 9.00மணியில் இருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் கி.சின்னராசா கேட்டுக்கொள்கின்றார்.

# கடன் திட்டம்

(பூநகரி)

பூநகரிப்பிரதேசத்தில் வலம்புரி இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களின் நன்மைகருதி விவசாயக் கடன்திட்டத்தின் கீழ் விதை நெல், உரம் என்பன வழங்கப்பட இருக்கின்றது. (34)

# வவு.எழுச்சி நாளை முன்னிட்டு கல்விச்சமூகம் கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள எழுச்சிநாளை முன்னிட்டு கலந்துரையாடல்கள் கடந்த வியாழனன்று இடம்பெற்றுள்ளது.

நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வவுனியா வடக்கு, தெற்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள், கோட்டக்கல்வி அலுவலர்கள், கல்விச் சமூகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். பிற்பகல் 1.00மணியளவில் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய பயிலுநர்களும், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும் கலந்துரையாடலில் பங்குபற்றினர். மாலை வவுனியா மாவட்ட அரச திணைக்களத்தைச்சேர்ந்த தலைவர்கள் கனகராயன் குளப்பகுதியில் அரசியல் துறையினரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நாளை 24ஆம் திகதி கிராமம் கிராமமாக முன்னோடிக் கலந்துரையாடலை வவுனியா மாவட்ட கல்வி அதிபர்களும், அதிகாரிகளும் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய பயிலுனர்களும், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும் இணைந்து நடாத்தவுள்ளனர். (05)

# அபிவிருத்திக்குழு தெரிவு

மன்னார் மாவட்டதமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டக் கிராமமான மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இலுப்பைக்கடவைக்கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு தெரிவு இடம்பெற்றுள்ளது.

வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சு.விஜயகுமார் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட இணைப்பாளர் ஆ.லோகநாதன் சமூக ஊக்குவிப்பாளர்கள் வே.நகுலன், செல்வி தவேதினி, எஸ். பி.தேவராஜ் ஆகியோர் கலந்து கொண்டுசமூகப் பொருளாதார அபிவிருத்திக் குழுவின் செயற்பாடு பற்றியும் அதன் செயற்பாட்டால் கிராமத்திற்கு கிடைக்கும் நன்மை பற்றியும் விளக்கிக்கூறினர். அடுத்து தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக க.வில்வராசா செயலாளராக க.வளநாடன், பொருளாளராக சகாயராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# சமய தீட்சை வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஆனந்தபுரம் ஸ்ரீதுர்க்கை அம்மன் தேவஸ்தான சமய தீட்சை நிகழ்வு நாளை பகல் 10.02மணி முதல் 12.00 மணி வரை மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்பெருமக்கள் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமய தீட்சை நிகழ்வில் அடியார்கள் கலந்து அம்மன்அருள் பெற்று ஏகும் வண்ணம் ஆலய பரிபாலன சபையினர் வேண்டியுள்ளனர்.(சோ)


# புதுக்குடியிருப்பு பிரதேச பெண்கள் அமைப்புக்களுக்கான கருத்தூட்டல்

(அலுவலகசெய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பிரதேச பெண்கள் அமைப்புக்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வு முல்லை மாவட்ட அரசியல்துறை கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச மாதர்சங்க தலைவி ம.வான்மதி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் கருத்துரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கலைவிழி, முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேளினி, புதுக்குடியிருப்பு பிரதேச மகளிர் அரசியல் துறைபொறுப்பாளர் மலரவள் ஆகியோர் வழங்கினர்.

இதில் பெண்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. சிலவற்றிற்குத் தீர்வுகளும் எடுக்கப்பட்டன.



கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழனன்று காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு வேலைகள் நடைபெற்றது. வட மாகாண பிறப்பு இறப்பு உப பதிவாளர் நாயகம் இந்தச்சேவைக்காக வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம் வதனன்)

# பொது குடிநீர் கிணறுகளைப் பயன்படுத்த பொதுமக்களுக்கு படையினர் தடை!

(யாழ்ப்பாணம்)

**யாழ். சுழிபுரம் திருவடி நிலைப் பகுதியில் உள்ள பொதுக் குடிநீர்க் கிணறுகளை தமது தேவைகளுக் காக மட்டும் பயன்படுத்திவரும் சிறிலங்கா கடற்படையினர் அக்கிணறு களைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்குதடைவிதித்துள்ளனர்.**

இதன் காரணமாக அப்பகுதியில் வாழ்ந்துவரும் பொதுமக்கள் தமது அன்றாட குடிநீர்த் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாது பெரும் அல்லறபடுகின்றனர்.

குறிப்பாக இப்பகுதி மக்களின் பாவனைக்கென அமைக்கப்பட்டிருந்த பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆக்கிரமித்து அவற்றைச் சூழ முட்கம்பிவேலிகளை அமைத்துள்ள கடற்படையினர். அக்கிணற்றுநீரை தமது தண்ணீர் பவுசர்களில் நிரப்பி கடற்படை முகாம்களுக்கு எடுத்துச் செல்லவும் தமது நீராடல் தேவை களுக்காகவும் பயன்படுத்தி வருவதுடன் பொதுமக்கள் பயன்படுத்தத் தடை விதித்துள்ளனர்.

இதனால் இப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் தமது குடிநீர் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக வலி தென்மேற்கு பிரதேசசபையின் தண்ணீர்பவுசர் சேவையை நாடவேண்டிநிலை உள்ளது. இது இவர்களின் இயல்பு வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளது. (33)

# தீவக மின்சார விநியோகத்தை சீராக்க மின்மாற்றிகள் தேவை!

(யாழ்ப்பாணம்)

மின்மாற்றிகள் போதாமை காரணமாகவே தீவகத்தின் பல பிரதேசங் களுக்கும் விநியோகிக்கப்படும் மின்சாரம் வலுக்குறைந்ததாகக் காணப்படுவதாக இலங்கை மின்சாரசபையினர் கூறுகின்றனர்.

யாழ். தீவகத்தில் உள்ள மின்விநியோகப்பாதைகளில் பொருத்துவதற்கு போதியளவு மின் மாற்றிகள் இல்லாதுள்ளதனால் மின்மாற்றிகள் பொருத்தப்படவேண்டிய அவசியம் உள்ள பல இடங்களில் மின்மாற்றிகள் பொருத்தப்படாது உள்ளன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இதனால் மின் விநியோகம் சீராக இடம்பெறாது தூர அதிகரிப்புக்கு ஏற்ப மின்னோட்டம் வலுக்குறைந்து செல்கிறது.

இதனால் பொது மக்கள் பல அசௌகரியங்களையும் சந்திக்கின்றனர். குறிப்பாக மின்குமிழ்கள் வலுக்குறைந்து ஒளிர்வதுடன், மின்சாதனங்களும் பழுதடைந்து போகின்றன.இது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் பயணிகள் மீது கெடுபிடி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-தீவகம் பிரதான தரைவழிப்பாதையில் உள்ள அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து பயணிகள் மீதான கெடுபிடிகளை இராணுவத்தினர் அதிகரித்துள்ளனர்.

இதன் காரணமாக இச்சோதனைச் சாவடியூடாகச் செல்வதற்கு பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சோதனைச்சாவடியூடாகச் செல்வோரை இது வரைகாலமும் சாதாரணமாகவே சோதனை செய்து வந்த படையினர் கடந்த சில தினங்களாக பயணிகளை கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக இளைஞர், யுவதிகளை தனிமையில் அழைத்துச் சென்று உடற்பரிசோதனையும் செய்கின்றனர். அத்துடன் கடுமையான விசாரணைகளையும் மேற்கொள்ளுகின்றனர்.

மேலும் வெளி இடங்களில் இருந்து தீவகத்துக்குசெல்லும் வாகனங்களை சல்லடைபோட்டு தேடுதல் நடவடிக் கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் அல்லைப் பிட்டி சோதனைச் சாவடி யூடாகச் செல்வதற்கு பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (33)

# யாழ். இந்து மகளிர் கல்லூரி முன் இளைஞர் குழு அட்டகாசம்!

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பின்புறம் கன்னியர்மட வீதியில் செல்லும் பெண்கள் மாணவிகளை அப்பகுதியில் கூடிநிற்கும் இளைஞர் குழு ஒன்று தினமும் காலை மாலை வேளைகளில் கூடிநின்று தகாத வார்த்தைகளைக்கூறிக் கதைப்பதுடன் பாட்டுப்பாடியும் கேலி செய்து வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட இளைஞர் குழுக்களுக்கு இவ்வாறான கலாச்சாரச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என இப்பகுதிப் பெரியோர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தும் இது குறித்து இந்த இளைஞர்குழு தொடர்ச்சியாக இக்கலாச்சாரச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.(28)

# யாழ். நகரங்களில் கழிவு நீர் வடிகால்களை புனரமைக்க "யுனிசெவ்" உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதானமான நகரங்களில் கழிவு நீர் வடிகால்களை புனரமைத்துக் கொடுப்பதற்கு யுனிசெவ் முன்வந்துள்ளது.

இதற்கான உறுதி மொழியை யுனிசெவ் அமைப்பின் அதிகாரிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேசிடம் வழங்கியுள்ளனர்.

அந்த வகையில் யாழ்.நகரம் தவிர்ந்த சுன்னாகம், வல்வெட்டித்துறை, நெல்லியடி, பருத்தித்துறை போன்ற பிரதான நகரங்களில் கழிவு நீர் வடிகால்களை புனரமைத்துக் கொடுக்க யுனிசெவ் முன்வந்துள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கூறினார்.

இந்நகரங்களில் காணப்படும் பிரதானமான வடிகால்கள் சேதமடைந்தநிலையில் காணப்படுகின்றதனால் இவற்றுள் கழிவுநீர் தேங்கி பல சுகாதாரசீர்கேடுகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை கவனத்தில் கொண்டே இவற்றைப்புனரமைக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. (33)

# சுகாதார சீர்கேடுகளைத் தடுக்க துரித நடவடிக்கை வேண்டும்

யாழ். பெரியகடை வீதியில் நீண்ட காலமாக இருந்த பொதுக் கழிவு நீர் கால்வாய் ஒன்று அதன் அருகில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டதற்கு பின்னால் திடீரென மறைந்து விட்டதாகத் தெரிய வருகிறது. இதனால் அந்த ஒழுங்கையில் உள்ள வீடுகள், வர்த்தக நிறுவனங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர், பொதுவாய்க்கால் தூர்ந்து விட்டதால் அந்தப் பாதை எங்கும் பரவி சுகாதார சீர்கேட்டையும் துர்நாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து யாழ். மாநகரசபை உரிய நடவடிக்கை எடுத்து தனியார் சிலரால் ஆக்கிரமித்து மூடப்பட்டு விட்ட இக்கால்வாயை திறந்து இப்பகுதியில் ஏற்பட்டிருக்கிற சுகாதார சீர்கேட்டை அகற்றமுன்வர வேண்டுமென்று இப்பகுதி வர்த்தக ஸ்தாபனத்தினர் பொதுமக்கள் ஆகியோர் கோரியுள்ளனர். (28)

# தொற்றுநோய்கள் பரவாது தடுக்க சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுக!

## - சாவகச்சேரி வைத்திய அதிகாரி அழைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் தொற்று நோய்களை கட்டுப்படுத்தவும், நோய்களை முன்கூட்டியே அறிந்து தடுக்கவும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டுமென சாவகச்சேரி வைத்திய அதிகாரி அம்பிகைபாகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மழை காலம் தொடங்கி விட்டத[illegible] விசக்காய்ச்சல்கள் மற்றும் தொற்று வியாதிக[illegible] ஏற்படும் சாத்தியக்கூறுகள் உள்ளதால் பொதுமக்கள் குடிநீரைச் சுடவைத்துப் பருக வேண்டும் என்றும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப் படுத்த வீடுகளுக்கு அருகில் நீர் தேங்காமல் பாதுகாக்கவும், நோயின் அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக மருத்துவமனையை அணுகி நோய்களின் ஆரம்பத்திலேயே அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர்பொதுமக்களைக் கேட்டுள்ளார். (28)

# ஈருருளியின் பூட்டை உடைத்து திருடமுயன்ற நபர் சிக்கினார்

## - யாழ். நாச்சிமார் கோவிலடியில் சம்பவம்

(வலிகாமம்)

யாழ்-நாச்சிமார் கோயிலடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மகளிர் ஈருருளியொன்றின் பூட்டை உடைத்துத்திருட முயன்ற திருடன் ஒருவர் கையும் மெய்யுமாக மாட்டிக்கொண்டார்.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை காலை இடம் பெற்றுள்ளது. பிரஸ்தாப துவிச்சக்கர வண்டியின் உரிமையாளரான யுவதி ஒருவர் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி வைத்துவிட்டு வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயமே திருடர் தனது கைவரிசையைக்காட்டியுள்ளார்.

அவ்வேளை ஆலயத்தில் நின்ற பொதுமக்கள் குறித்த திருடனை மடக்கிப்பிடித்து நையப்புடைத்தபின், மக்கள் பார்வைக்காக ஆலயத்தேர் முட்டியில் கட்டி வைத்தனர்.

நீண்ட நேரம் கட்டி வைக்கப்பட்ட திருடன் பலத்த எச்சரிக்கையின் பின்னர் பொதுமக்களால் விடுவிக்கப் பட்டார். (37)

# வீடுகள் நிர்மாணிப்பிற்காக பயனாளிகள் தெரிவு

(வலிகாமம்)

வலிமேற்குப்பிரதேச செயலர் பிரிவில் 2006ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் நிரிமாணிக்கப்படவிருக்கும் வீடுகளுக்காக கிராமங்களைத் தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவிக்கின்றார்.

இவ்வருடம் வலி-மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 91வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவ்வீடுகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

அடுத்தாண்டு பிரதேசத்திலுள்ள கிராமங்களில் எத்தனை வீடுகளை அமைக்க வேண்டும் அதற்கான பயனாளிகள் தெரிவு போன்ற வேலைத்திட்டங்களில் வலி-மேற்குப் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் ஈடுபட்டு வருவதாகப்பிரதேச செயலர் தெரிவிக்கின்றார். (37)

*-இந். இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட-*

# யாழ்.போதனாவைத்தியசாலை ஊழியரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

1987 ஆம்ஆண்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த மருத்துவர்கள் , பணியாளர்கள் 21 பேர் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 18 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது. வைத்தியசாலையின் பணிப்பாளர் ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் மருத்துவர் உட்பட 21ஊழியர்களின் படங்களுக்கு மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

காலை 10 மணியளவில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பொதுமக்களும் மருத்துவமனை பணியாளர்களும், மருத்துவர்களும் கலந்துகொண்டனர். (28)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் வாகனம் வீட்டுக்குள் புகுந்தது

## - இருவர் படுகாயம்

(வடமராட்சி)

வடமராட்சி வல்வெட்டித்துறை வேம்படி சந்திப்பகுதியில் கன்ரர் வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி வீட்டுக்குள் நுழைந்ததில் கன்ரர் வாகனத்தில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது

இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த ஜெகநாதன் தவராசா (வயது-25), ஆனந்தன் ஜெயராசா (வயது-28) ஆகியோரே தலையில் படுகாயம் அடைந்த நிலையில் வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை கன்ரர் வாகனத்துடன் அதன் சாரதியும் சம்பவ இடத்திலிருந்து ஓடித்தலைமறைவாகியுள்ளார்.

கன்ரர் வாகனம் மோதிய வீட்டின் சுவர்கள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

சம்பவஇடத்திற்குச் சென்ற வல்வெட்டித் துறைப்பொலிஸ் நிலையப்பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கா)

# பயிற்சியூடாக வலுமிக்க ஆசிரியர் அணியாக உருவாகுவோம்

ஆக்கம்:- திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ்

"ஆசிரியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் பொழுது தான் ஆசிரியத் தொழிலின் கல்விச் சுதந்திரமும் பேணப்படுதல் வேண்டும்" என்பது ஆசிரியத் தொழிலின் அந்தஸ்து தொடர்பாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமான யுனெஸ்கோவின் பரிந்துரையில் எட்டாவது பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள செய்தியாகும். மானிட சமுதாயத்தை மாண்புடன் ஒளிரச் செய்யும் அற்புத பணியாற்றுபவர்கள் ஆசிரியர்களே.

கல்வி என்பது வளர்ந்து கொண்டிருப்பது என்றும் சூழ்நிலை மாற்றங்களோடு மாறிக் கொண்டிருக்க வேண்டியது கல்வி என்றும் இயங்கிக் கொண்டிருப்பது கல்வி என்றும் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கல்வி வளர்ந்து வரும் தேவைகளுக்கு வழிகாட்ட வேண்டும் எனப் பல கருத்துக்களைக் கொண்ட கல்வியோடு நேரடியான தொடர்புடைய கல்விச் சமூகத்தினர் அனைவருக்குமான 2005 ஆம் ஆண்டு ஆசிரிய நாள் உணர்த்தும் செய்திதான் "பயிற்சியூடாக வலுமிக்க ஆசிரியர் அணியாக உருவாகுவோம்".

கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய மாற்றங்களை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கு ஆசிரியர் தர மேம்பாடு பிரதானமானது. இதனால்தான் ஆசிரியர் பயிற்சியும் ஆசிரியர் கல்வியும் முதன்மைப்படுத்தப் படுகின்றது. ஆசிரியர்களுக்கான கல்வியும் பயிற்சியும் அதிகரிக்கும் போது வினைத்திறனுடைய கற்பித்தல் நிகழும் என்பது யாதார்த்தமாகும்.

கல்வியும் பயிற்சியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையது. இதனால்தான் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கும் நிறுவனங்கள் தர அடிப்படையில் போட்டியிடுகின்றன. ஆசிரியர்களுக்கு பயிற்சியை வழங்கும் நிறுவனங்களாக தேசிய கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகத்தின் கல்வியியற் துறை, திறந்த பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், ஆசிரிய நிலையங்கள் என்பவை விளங்குகின்றன. இந் நிறுவனங்கள் ஆசிரியாகளுக்கான பயிற்சியை

I. சேவையின் முன்பு

II. சேவையின் போது

என்ற அடிப்படையில் வழங்குகின்றன.

'ஆசிரியர்கள் கல்வி பற்றிய அடிப்படை அறிவின்றிப் பாடசாலைகளில் நியமிக்கக் கூடாது' என்ற தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைக்குப் பின்பும் ஆசிரியர்கள் பயிற்சியின்றியே நியமிக்கப்படும் நிலை இன்றுவரை நிலவுவதற்கு, இலங்கையில் எல்லோருக்கும் வேலை வழங்கும் பிரதான துறையாக ஆசிரியத்தொழில் துறை விளங்குகின்றமை பிரதான காரணமாகும். வெளிநாடுகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியருக்கு மிகக் குறைந்த தகைமை பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகும். ஆனால் இலங்கையில் யாரும் கற்பிக்கும் ஒரு பிரிவாக ஆரம்பக்கல்வி விளங்குகின்றது. இதனால்தான் இன்றுவரை ஆரம்பக்கல்வியின் தரம் வீழ்ச்சியாக உள்ளது. பயிற்சியின் பின்னான ஆசிரிய நியமனத்தை வழங்கும் ஒரு நிறுவனமாக தேசிய கல்விக் கல்லூரிகளே தொழிற்படுகின்றன.

ஆசிரியர்கள் பயிற்சியூடாகப் பெற்ற கல்வியை மாணவரின் மேம்பாடு கருதி வகுப்பறையில் பயன்படுத்துவதில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. ஏனெனில் அண்மைக் காலங்களில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் ஒப்பீட்டளவில் கடந்த காலங்களை விட அதிகமாக இருந்தும் மாணவர்களின் பொதுப்பரீட்சை அடைவு மட்டங்கள் வீழ்ச்சிப் போக்கில் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் ஆசிரியர்கள் தாம் பெற்ற பயிற்சியை வகுப்பறைக்கு எடுத்துச் சென்று வினைத்திறனுடைய மாணவ சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக தமது பதவியுயர்வு சம்பள உயர்ச்சிக்காகவே பயிற்சிகள் என்ற குறுகிய சிந்தனையுடையவர்களாக ஆசிரியர்கள் திகழ்கின்றனர் என்ற கருத்தை ஆசிரியர்களாகிய நாம் மாற்றியமைக்கும் வகையில் கற்றல்- கற்பித்தலை மேம்படுத்த வேண்டும்.

ஆசிரியத் தொழிலென்பது புனிதமானது மட்டுமன்றி அர்ப்பணிப்போடு கூடியது. அர்ப்பணிப்பு இன்றேல் எவ்வளவு பயிற்சியிருந்தும் மாணவர்கள் வெறுமையே! ஆசிரியர்கள் பயிற்சியூடாகப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு வகுப்பறைச் செயற்பாடுகளை வினைதிறனுடையதாக்க வேண்டும். ஆசிரியர்கள் பயிற்சியைப் பெறுவதன் மூலம் கல்வி உளவியல், கல்விக் கொள்கைகள், தத்துவங்கள், கற்பித்தல் முறைகள், கல்வி- மாணவர் பற்றிய மதிப்பீடு, பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், தருணத்திற்கு ஏற்ற கற்பித்தல் முறைகள், ஆசிரியர்- மாணவர் உறவு, சமூகவியல் சிந்தனை முதலியவற்றைப் பெறுகின்றனர். இவைபற்றிய அறிவு ஆசிரியர்களுக்கு இருப்பின் மாறுகின்ற உலகிற்கு ஏற்ற ஆளுமைப்பண்புடைய மாணவ சமுதாயத்தை உற்பத்தி செய்ய முடியும். இதன் பொருட்டே ஆசிரியருக்கான கல்வியும் பயிற்சியும் முதன்மைப் படுத்தப்படுகிறது.

தன்னிடமுள்ள ஒவ்வொரு பிள்ளையையும் பற்றிய 'தூர நோக்குச் சிந்தனை ஆசிரியரிடமிருக்க வேண்டும். அனுமான அடிப்படையில் மாணவரை மதிப்பிடாது அவர்களுடனான நெருக்கமான உறவு மூலம் மதிப்பிடுவது அவசியம். ஆசிரியர்- மாணவர் உறவு என்பது இன்று அருகி வருகின்றது. ஆசிரியர்களை மதிக்கும் மாணவ சமூகம் குறைந்து வருகின்றது. இதற்கு கல்வி விலைபேசும் பொருளாக மாறி வருவதும் ஒரு காரணமெனலாம். காசிருந்தால் எங்கும் கல்வியைப் பெறலாம் என்ற மாணவர் பெற்றோர்களது மன நிலையை மாற்றத் தகுந்த புதிய போக்குகளுக்கு ஏற்ற ஆசிரியர் பயிற்சிகளை ஒவ்வொரு ஆசிரியரும் பெற வேண்டும்.

ஆசிரியர் என்போர் "பிள்ளைகள் எதனைக் கற்க வேண்டும் என்பதைத் திரட்டிக் கொடுப்பவர்கள் அல்லர். மாறாக பிள்ளைகளுக்கு உபயோகமான அனுபவங்களைத்தெரிந்தெடுத்துக்கொடுப்பதே அவர் பணியாகும்" சிந்தனை ரீதியான ஆற்றலைத் தூண்டி ஒவ்வொரு பிரச்சினையையும் விடுவிக்கும் ஆற்றலை மாணவரிடம் வளர்ப்பதே இன்றைய தேவையாகவுள்ளது. அதற்கான கற்றல் அனுபவப் பயிற்சிகளை ஆசிரியர்கள் பெறவேண்டும். எமது கல்வீ கலாசாரத்தில் கல்வித்தகைமை, பயிற்சி என்பவற்றிற்கு மேலாக மூப்பு இடம் பிடித்திருப்பதையும் மறுப்பதற்கில்லை. எவ்வளவு தான் சேவையில் மூப்பு இருப்பினும் புதியவை தொடர்பான கல்விப் பயிற்சிகள் அவ்வப்போது பெறாதவிடத்து பயனற்ற கல்வியே வெளியாகும். திறமை, பயிற்சி, அனுபவம், அர்ப்பணிப்பு என்பன ஒன்றிணையுமிடத்தே தரமான கல்வி வெளியிடப்படும்.

எனவே சுருங்கக் கூறின் ஆசிரியத் தொழில் தொடர்பாக உலக மயமாதலுக்கு ஏற்ப நவீன தொழிற்றிறன்களை ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றிருக்க வேணடும். வெறும் தராதரப் பத்திரங்களுக்கும் சம்பளத்திற்கும் மட்டுமன்றி ஏற்றுக் கொண்ட தொழிலை சிறப்புற ஆற்றுவதற்கும் ஆசிரியத் தொழிலின் இயல்புகளாவன.

- ☐ ஆயத்த நிலை
- ☐ சக்தி மட்டம்
- ☐ மாணவர் - ஆசிரியர் உறவு
- ☐ ஆசிரியரின் தன்னம்பிக்கை

போன்றவற்றை தக்க வைப்பதற்கும், கற்பித்தல் தொடர்பாக வெளியாரது விமர்சிப்பிலிருந்து விடுபடவும், புதிய கருத்துக்கள், சிந்தனைகள், மாற்றங்களை உள்வாங்கி மாணவ சமுதாயத்தை வளமுடைய தாக்குவதோடு , கற்றலுக்காகக் கற்றல் எனும் தகைமைத் தேர்ச்சியை ஒவ்வொருவரும் தாரகமந்திரமாக ஏற்றுச் செயற்பட உறுதி பூணுவோம்.

# ஊதிய உயர்வைத் தடுக்கும் சுற்று நிருபத்தை நீக்க வலியுறுத்தி வேலை நிறுத்தம்!

## சிறி.சுகாதார சேவையாளர் தொ.ச.கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

ஊதிய உயர்வை இரத்து செய்த சுற்றுநிருபத்தை விலக்கிக் கொள்ளா விட்டால் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் இலங்கை தழுவிய முழு அளவிலான வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கப்படும் என்று சிறிலங்கா சுகாதாரச் சேவையாளர் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய இச்சங்கத்தின் செயலாளர் ரவி குமுதேஸ் கூறியதாவது;

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வுக்கான சுற்றுநிருபத்தை இரத்துச் செய்தது யார் என்பது குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விசாரணை நடத்த வேண்டும்.

ஊதிய உயர்வை இரத்துச் செய்த சுற்று நிருபத்தை விலக்கிக் கொள்ளா விட்டால் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கும் என்றார் அவர்.

சுகாதாரத்துறை சேவையாளர்கள் சில நாட்களுக்கு முன்பாக ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தியதன் பின்னணியில் அரசியல் கட்சிகள் இருப்பதாக சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருந்ததற்கும் தொழிற்சங்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைப்பதில் தேர்தல் செயலகத்திடம் உறுதியான முடிவில்லை!

## - சனாதிபதி வேட்பாளர்களும் மௌனம்

(கொழும்பு)

**சிறிலங்கா** சனாதிபதித் தேர்தலில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை அழைப்பது தொடர்பில் இதுவரை உறுதியானதொரு முடிவை தேர்தல் செயலகம் எடுக்கவில்லை. தேர்தலைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை அழைக்குமாறு தேர்தல் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரும் இதுவரை கோரிக்கை விடுக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் சொந்தச் செலவில் இலங்கைக்கு வந்து தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத்தயாராக இருப்பதாகவும் கூறப்படுகிறது. வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துமாறு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

– சுனாமியால் பாதிக்கப்பட்ட –

# அரச உத்தியோகத்தர்களிற்கு விசேட சம்பள முற்பணக் கடன்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வட்டியில்லாத விசேட சம்பள முற்பணக் கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கெனத் திறைசேரி பத்துகோடி நிதியை மாகாண சபைக்கு வழங்கியுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாணப் பிரதிச் செயலாளர் எஸ்.தங்கராஜா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் பதவி நிலை உத்தியோகத்தர்களின் வீடு முழுமையாகச் சேதமடைந்திருந்தால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்திருந்தால் 90 ஆயிரம் ரூபாவும், வீட்டு உபகரணங்கள் இழந்திருந்தால் 48 ஆயிரம் ரூபாவும் முற்பணமாகக் கடனாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமி நிதி மோசடி வழக்கில் மகிந்த தடையாணை பெற்றது சரிதான்

## – பிரதியமைச்சர் சிறீபதி சூரியாராய்ச்சி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை ஆழிப்பேரலை நிவாரண நிதி மோசடி வழக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரும், பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தடையாணை பெற்றது சரியான நடவடிக்கையே என்று பிரதி அமைச்சர் சிறீபதி சூரியாராய்ச்சி தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் சிறீபதி சூரியாராய்ச்சி கூறியதாவது:-

அம்பாந்தோட்டை வழக்கு விசாரணையானது ஊடகம் ஒன்றில் வெளியான செய்திகளை அடிப்படையாகக் கொண்டது மட்டுமே. தேர்தல் காலத்தில் தம்மீதான இந்த அவதூறுப் பிரச்சாரத்தைத் தடுக்கவே மகிந்த ராஜபக்ஷ தடயாணை பெற்றார். இலஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவின் விசாரணையை மகிந்த ராஜபக்ஷ எந்தச் சூழலிலும் தடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் கணனி கொள்வனவு மோசடி வழக்குக் குறித்தும் அம்பாந்தோட்டை வழக்குக் குறித்தும், ரணில் பரிந்துரைக்கும் எந்த இலத்திரனியல் ஊடக விவாதத்துக்கும் நாங்கள் தயாராக உள்ளோம் என்றார்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

யா/யா/35 திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி இராசரத்தினம்
யா/யா/48 திருமதி. புவனேஸ்வரி மயில்வாகனம்
யா/யா/ 56 திரு. சின்னத்துரை அமிர்தலிங்கம்
யா/யா/61 திரு. மரியாம்பிள்ளை ஜேம்ஸ்இராசசிங்கம்
யா/யா/95 திருமதி. கமலாம்பிகை துரைசிங்கம்
யா/யா/128 திரு. கனகரெத்தினம் செல்வராஜா
யா/யா/ 197 திருமதி. புஸ்பமலர் ஜேக்கப்
யா/யா/214 திரு. ஐயம்பிள்ளை பொன்னம்பலம்
யா/யா/297 திருமதி. தவமலர் யோசெப்மரியான்
யா/யா/319 திரு. சாமுவேல் ஆனந்தராசா தருமரத்தினம்
யா/யா/357 திருமதி. தங்கமணி பழனிச்சாமி
யா/யா/359 திரு. முத்துக்குமார் தருமலிங்கம்
யா/யா/381 திருமதி. பரமேஸ்வரி உருத்திரா
யா/யா/388 திருமதி. திலகவதி கந்தசாமி
யா/யா/410 திருமதி. பாறுபதி சின்னத்தம்பி
யா/யா/437 திரு. பாவிலு அமிர்தநாயகம் (ஜெபி)
யா/யா/461 திரு. முருகன் இராசரத்தினம்
யா/யா/491 திருமதி. பராசக்தி சிவசுப்பிரமணியம்
யா/யா/ 529 திரு. இராசா இராசசுந்தரம்
யா/யா/535 திரு. தியாகராசா திருநாவுக்கரசு
யா/யா/550 திரு. ஆறுமுகம் பொன்னப்பா குலசிங்கம்
யா/யா/567 திருமதி. தங்கமணி நடராஜா
யா/யா/575 திரு. மருதப்பா கந்தசாமி
யா/யா/580 திருமதி. பூரணம் இரத்தினம்
யா/யா/587 திரு. நல்லதம்பி சோமசுந்தரம்
யா/யா/588 திரு. சரவணமுத்து பாலசுப்பிரமணியம்
யா/யா/590 திரு. நாராயணசாமி நாகராசா
யா/யா/ 609 திரு. துரையப்பா நடராசா
யா/யா/647 திருமதி. மனோன்மணி சச்சிதானந்தம்
யா/யா/650 திருமதி. மனோன்மணி சச்சிதானந்தன்
யா/யா/ 667 திரு. அரபமூர்த்தி தங்கவேல்
யா/யா/749 திரு. பொன்னம்பலம் வீரபத்திரன்
யா/யா/753 திரு. பொன்னம்பலழ் வீரபத்திரன்
யா/யா/811 திருமதி. கமலாட்சி கோபாலகிருஷ்ணன்
யா/யா/864 திரு. பர்னாந்து செபமாலை மரியதாஸ்
யா/யா/878 திரு. மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளை
யா/யா/893 திருமதி. செல்வதியம்மா செல்வரத்தினம்
யா/யா/926 திரு. ஜோசேப் சவிரிமுத்து
யா/யா/936 திரு. பத்தினாதர் சிறில்
யா/யா/942 திருமதி. லூசியா அலெக்சாண்டர்
யா/யா/943 திருமதி. சவேரியம்மா இம்மனுவேல்
யா/யா/949 திருமதி. பறுவதம் சங்கரப்பிள்ளை
யா/யா/963 திருமதி. தங்கரத்தினம் பேரம்பலம்
யா/யா/977 திருமதி. பத்மாவதிஅம்மாள் சோமகாந்தன்
யா/யா/1001 திருமதி. றெஜினா கிலோமினா தனசிங்கம்
யா/யா/1005 திரு. செல்லையா கணபதிப்பிள்ளை
யா/யா/1017 திரு. தம்பு தங்கராசா
யா/யா/1033 திரு. தம்பு தங்கராஜா
யா/யா/1041 திரு. தம்பிப்பிள்ளை இராஜேந்திரா
யா/யா/1060 திருமதி. ஜெகதீஸ்வரி நரேந்திரா
யா/யா/1102 திரு. வஸ்தியாம்பிள்ளை யோசவ் மார்சலீன்
யா/யா/1110 திருமதி. றெயினா தேவசகாயம்
யா/யா/1117 செல்வி. கிருபா ஜனனி வேதநாயகம்
யா/யா/1118 திருமதி. சைவராணி ஜெயரத்தினம்
யா/யா/1119 திருமதி. யோகவதி மகேஸ்வரன்
யா/யா/1124 திருமதி. பத்மாவதி கந்தசாமி
யா/யா/1125 திருமதி. கனகலட்சுமி சபாரத்தினம்
யா/யா/1137 திருமதி. பிறிட்ஜென் இராஜசூரியர்
யா/யா/1140 திருமதி. அன்னலெட்சுமி ஜேம்ஸ்
யா/யா/1141 திரு. ஞானப்பிரகாசம் சிறில்
யா/யா/1146 திரு. நல்லதம்பி விஜயரெட்ணம்
யா/யா/1157 திருமதி. அன்னலெட்சுமி இரத்தினம்
யா/யா/1169 திருமதி. மரியம்மா எட்வேட்பிறின்ஸ்
யா/யா/1220 திரு. விக்ரர்ராசநாதன் ஞானப்பிரகாசம்
யா/யா/1237 திரு. முத்தையா அல்பிறட் ஜெயராஜா
யா/யா/1239 திரு. அந்தோனிப்பிள்ளை யோன்பிள்ளை
யா/யா/1255 திரு. ஸ்ரான்லி ரதிச்சந்திரன் நித்தியானந்த ராசா ஸ்பென்சர்
யா/யா/1294 திரு. ஆசீர்வாதம் யோசேப் மரியதாசன்
யா/யா/1296 திருமதி. பமலாவசந்தி றிச்சேட்ஸ்
யா/யா/1319 திரு. கந்தையா மகாலிங்கம்
யா/யா/1343 திரு. கந்தையா சோமசேகரம்பிள்ளை
யா/யா/1357 திரு. செல்லப்பா நாகேசன்
யா/யா/1375 திரு. இரத்தினம் செல்வநாயகம்
யா/யா/1383 திரு. வல்லிபுரம் கந்தையா
யா/யா/1389 திரு. இராமலிங்கம் லோகநாதன்
யா/யா/1391 திரு. கதிரவேலு விஜயசிங்கம்
யா/யா/1428 திரு. இரபாயில்லூட்ஸ் சேவியர்
யா/யா/1454 திரு. தம்பாப்பிள்ளை குணசிங்கம்
யா/யா/1469 திரு. மாசாணம்பிள்ளை இராமகிருஷ்ணன்
யா/யா/1478 திருமதி. வடிவாம்பிகை சண்முகராசா
யா/யா/1508 திரு. விஸ்வலிங்கம் மகாலிங்கம்
யா/யா/1512 திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்
யா/யா/1522 திருமதி. மேரிகத்தலின் திருஞானசம்பந்தர்
யா/யா/1554 திரு. மாசானம்பிள்ளை இராமகிருஷ்ணன்
யா/யா/1580 திருமதி. இராஜேஸ்வரி சரவணமுத்து
யா/யா/1611 திருமதி. அக்னஸ் ஜோர்ஜ்
யா/யா/1617 செல்வி. லக்சி நிக்கலஸ்
யா/யா/1618 திரு. சிவனாச்சாரி பத்மநாதன்
யா/யா/1620 திருமதி. சறோஜினி கைலாயபிள்ளை
யா/யா/1638 திரு. சவிரிமுத்து அமிர்தராஜா
யா/யா/1695 திரு. செல்லையா தியாகராஜா
யா/யா/1710 திரு. சின்னத்தம்பி வேலாயுதம்
யா/யா/1713 திரு. வேலுச்சாமி கந்தசாமி
யா/யா/ 1751 திருமதி. நித்தியலட்சுமி கதிர்காமத்தம்பி
யா/யா/1752 திருமதி. பாக்கியம் சங்கரப்பிள்ளை
யா/யா/1765 திரு. அந்தோனிப்பிள்ளை யோசவ்
யா/யா/1781 திரு. பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி
யா/யா/1798 திருமதி. ராசாத்தியம்மா சபாரட்ணம்
யா/யா/1842 திருமதி. ராதாலட்சுமி நாராயணசாமி
யா/யா/1854 திருமதி. புவனேஸ்வரி இராசையா
யா/யா/1879 திருமதி. அம்புஜம் துரைசாமி
யா/யா/1893 திருமதி. ருக்மணி தியாகராஜா
யா/யா/1913 திரு. தில்லையம்பலம் சண்முகலிங்கம்
யா/யா/1919 திரு. வைத்தி சந்தியாப்பிள்ளை
யா/யா/1932 திரு. காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்
யா/யா/1944 திரு. ஏரோனி பிரான்சீஸ்
யா/யா/1956 திரு. மரியான் பேதுருப்பிள்ளை வேதநாயகம்
யா/யா/1965 திரு. சாமுவேல் வயிரமுத்து நவரட்ணம்
யா/யா/1977 திருமதி. ஞானம்பிகை மகாதேவன்
யா/யா/2008 திருமதி. எலிசபேத் செபஸ்ரியாம்பிள்ளை
யா/யா/2018 திருமதி. மரியம்மா யோசேப்
யா/யா/2038 திருமதி. செல்வபாக்கியம் இராஜேஸ்வரன்
யா/யா/2042 திருமதி. செல்வராணி அழகராஜா
யா/யா/2052 திருமதி. ராசலெட்சுமி சண்முகரெட்டினம்
யா/யா/2075 திரு. சவிரிமுத்து மரியாம்பிள்ளை டோமினிக்
யா/யா/2081 திரு. அருளப்பு பிலிப்பையா
யா/யா/2100 திருமதி. ராஜேஸ்வரி ஸ்ரனிஸ்லோஸ்
யா/யா/2103 திருமதி. நாகேஸ்வரி இராசையா
யா/யா/ 2123 திருமதி. பரமேஸ்வரி கனகசபை
யா/யா/2131 திருமதி. இராஜேஸ்வரி கிறிஸ்ரி
யா/யா/2146 திருமதி. ருக்மணி மகேந்திரன்
யா/யா/2160 திரு. அலோசியஸ் பேனாட் பெர்னான்டஸ்
யா/யா/2185 திரு. அந்தோனிப்பிள்ளை யோசெப்
யா/யா/2202 திரு. சென்றோக் அகஸ்ரின்
யா/யா/2257 திரு. சோமசுந்தரம் சிவபாலசிங்கம்
யா/யா/2278 திரு. குமாரசாமி குமாரசூரியர்
யா/யா/2288 திரு. நாகனாதர் பாலசிங்கம்
யா/யா/ 2412 திருமதி. நவமணி துரைசிங்கம்
யா/யா/2440 திருமதி. பபிலோனியா அந்தோனிப்பிள்ளை
யா/யா/2444 திரு. மிக்கேல் அஞ்சலோ
யா/யா/2471 திருமதி. திரேசம்மா அந்தோனிப்பிள்ளை
யா/யா/2527 திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு
யா/யா/2537 திருமதி. பூமலர் பிலிப்
யா/யா/2555 திரு. சோமசுந்தரக்குருக்கள் வரதராசசர்மா
யா/யா/2570 திரு. நாகலிங்கம் இராசு
யா/யா/2575 திரு. முத்துக்குமாரு கந்தசாமி
யா/யா/2577 திரு. பொன்னம்பலம் சிவப்பிரகாசம்
யா/யா/2586 திரு. பர்ணாந்து பொனிப்பாஸ்
யா/யா/2595 திருமதி. பத்மாவதி மதனசேகரன்
யா/யா/2600 திருமதி. காந்திமதி வேலாயுதம்
யா/யா/2606 திரு. நாகேந்திரர் மருதலிங்கம்
யா/யா/2620 திரு. ஆசிர்வாதம் ஸ்ரீபன்
யா/யா/ 2627 திருமதி. பராசக்தி கந்தசாமி
யா/யா/2657 திரு. சோமசுந்தரஜயர் நடராஜசர்மா
யா/யா/2658 திருமதி. லியோணி குலசிங்கம்
யா/யா/2666 திருமதி. பரமேஸ்வரி தனபாலரட்ணம்
யா/யா/2750 திருமதி. தங்கம்மா குமாரவேலு
யா/யா/2751 திருமதி. கமலாம்பிகை சண்முகநாதன்
யா/யா/2816 திருமதி. மணி யேசுதாசன்
யா/யா/2824 திருமதி. பொன்னம்மா ஆறுமுகம்
யா/யா/2856 திருமதி. சிவபாக்கியம் இரத்தினம்
யா/யா/2883 திரு. பிலிபஸ் யோசப் பாலேந்திரா
யா/யா/2912 திருமதி. செல்லம்மா கணபதிப்பிள்ளை
யா/யா/2930 திரு. செல்லர் நரேந்திரன்
யா/யா/2958 திரு. செல்லத்துரை இராசரெத்தினம்
யா/யா/3019 திருமதி. மேரிறோசம்மா அமிர்தவாசகம்
யா/யா/3051 திரு. அலோசியஸ் பஸ்ரியாம்பிள்ளை
யா/யா/3059 திருமதி. மேரிஏணஸ்ரீன் யோண்பிள்ளை
யா/யா/3083 திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வரட்ணம்
யா/யா/3101 திருமதி. அந்தோனியாப்பிள்ளை சத்தியநாதன்
யா/யா/3132 திரு. அந்தோனிப்பிள்ளை அலெக்சீஸ்
யா/யா/3157 திரு. குருசுமுத்து மாசிலாமணி
யா/யா/3227 திருமதி. விஜயலட்சுமி முத்துக்குமாரு
யா/யா/3248 திருமதி. பிலோமினா செல்வராச
யா/யா/3322 திருமதி. மாகிறேற் பெனடி
யா/யா/3326 திரு. யோசப் விக்ரர் அன்ரனி
யா/யா/3327 திருமதி. மெக்டலீன் அல்போன்சஸ்
யா/யா/3332 திருமதி. இராசம்மா அந்தோனிப்பிள்ளை
யா/யா/3359 திரு. இறப்பியல் தோமஸ்
யா/யா/3361 திரு. டோறஸ் இராஜசிங்கம்
யா/யா/3371 திரு. வஸ்தியாம்பிள்ளை சூசையா
யா/யா/3446 செல்வி. மேரிறேசா கொன்ஸரன்ஸ் சவரிமுத்து
யா/யா/3460 திருமதி. ஜெர்மனி அருளப்பு
யா/யா/3467 திருமதி. திரேசம்மா நேபட் ஸ்ரனிஸ்லோஸ்
யா/யா/3470 திருமதி. றோசம்மா மனவல்
யா/யா/3473 திருமதி. றீற்றம்மா பெணான்டோ
யா/யா/3475 திருமதி. இமல்டா சிறில்
யா/யா/3505 திரு. பிறகாசம் மாட்டின்
யா/யா/3527 திருமதி. மேரியம்மா யோசப்நாயகம்
யா/யா/3536 திரு. அந்தோனி யோண்
யா/யா/3566 திருமதி. செபமாலை அந்தோனிப்பிள்ளை
யா/யா/3568 திரு. மனவல் யூலியன்
யா/யா/3576 திரு. அந்தோனி யேசுதாசன்
யா/யா/3579 திருமதி. ஆனாகி கிறகோரி
யா/யா/3616 திருமதி. மேரிபிபியானா சேவியர்
யா/யா/3631 திரு. முருகேசு கனகரெத்தினம் முருகையா
யா/யா/3643 திருமதி. திரேசம்மா இம்மானுவல்
யா/யா/3707 திரு. நாகலிங்கம் குமாரசாமி
யா/யா/3723 திருமதி. இராஜேஸ்வரி தம்பிராஜா
யா/யா/3748 திருமதி. றோஸ்மேரி பாலசிங்கம்
யா/யா/3750 திரு. செபஸ்தியன் யோகரட்ணம்
யா/யா/3776 திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம்
யா/யா/3796 திருமதி. அரியமலர் பாலச்சந்திரமூர்த்தி
யா/யா/3803 திரு. சோமசுந்தரம் பரமானந்தம்
யா/யா/3815 திரு. போடிரெட்டியார் குருசாமி
யா/யா/3818 திருமதி. ஜீவரட்ணாவதி இராசரெத்தினம்
யா/யா/3825 திருமதி. மாணிக்கம் கந்தையா
யா/யா/3850 திரு. பறனாந்து யோசேப் அன்ரனி
யா/யா/3856 திருமதி. பொன்னம்மா பொன்னுத்துரை
யா/யா/3872 திருமதி. கனகம்மா குணசிங்கம்
யா/யா/3880 திருமதி. லட்சுமி கனகசபை
யா/யா/3881 திரு. பரமநாதன் குணசேகரம்
யா/யா/3893 திரு. தில்லைவணம்பிள்ளை சங்கரலிங்கம்
யா/யா/3896 திருமதி. பத்மாவதி சின்னத்துரை
யா/யா/3902 திரு. சவிரிமுத்து இம்மனுவல் ஆனந்தராசா
யா/யா/3905 திரு. ஐயாக்குட்டி நவரத்தினம்
யா/யா/3917 திரு. முருகர் தம்பித்துரை
யா/யா/3936 திரு. சித்தன்செட்டியார் நடராஜன்
யா/யா/4020 திருமதி. இராசலட்சுமி சந்திரசேகரம்
யா/யா/4079 திரு. கந்தையா கணேசமூர்த்தி
யா/யா/4121 திருமதி. அன்னலெட்சுமி இரத்தினசபாபதி
யா/யா/ 4144 திரு. சின்னத்துரை இம்மனுவேல்
யா/யா/4162 திருமதி. பேர்லி பிரான்சிஸ்
யா/யா/4164 திரு. சுவாம்பிள்ளை அடைக்கலம்
யா/யா/ 4195 திரு. இளையதம்பி நாகலிங்கம்
யா/யா/4197 திருமதி. திரேசம்மா வஸ்தியாம்பிள்ளை
யா/யா/4199 திருமதி. றீற்றா பொனிபஸ்
யா/யா/4207 திரு. மனியல் கிறிஸ்ரி ஜீவரெட்ணம்
யா/யா/4228 திரு. நாகன் யேசுதாசன் தம்பிப்பிள்ளை
யா/யா/4249 திரு. ஞானப்பிரகாசம் அருளானந்தம்
யா/யா/4253 செல்வி. நிர்மலா லூயிஸ்
யா/யா/4283 செல்வி. றீற்றா ஞானப்பிரகாசம்
யா/யா/4357 திருமதி. றூபி மொனிக்கா லியோ
யா/யா/4415 திரு. மனுவல் பிரான்சியஸ் சேவியர்
யா/யா/4434 திரு. மனாசை டேவிட் தம்பிராஜா
யா/யா/4452 திரு. சுப்பையா சண்முகவேல்
யா/யா/4466 திருமதி. செல்வம் நவமணி
யா/யா/4468 திருமதி. தேவகரம் முத்தையா
யா/யா/4495 செல்வி. கௌரி சுப்பிரமணியம்
யா/யா/4496 திருமதி. செல்வராணி சிவசிதம்பரநாதன்
யா/யா/4513 செல்வி. தையல்நாயகி சின்னையா
யா/யா/4538 திரு. மைக்கேல் யேசுதாஸ்சன்
யா/யா/4544 திருமதி. சிசிலியா பாக்கியநாதன்
யா/யா/4547 திரு. இம்மனுவல் திருச்செல்வம்
யா/யா/4559 திரு. சிமியோன் அருளப்பு
யா/யா/4564 திருமதி. காமாச்சி அந்தோனி
யா/யா/4597 திருமதி. விஜயலட்சுமி கந்தையா
யா/யா/4600 திருமதி. மருக்கொழுந்து கனகரெட்ணம்
யா/யா/4618 திரு. கந்தன் சதாசிவம்
யா/யா/4658 செல்வி. மேரிஅக்னெஸ் லோப்பையா
யா/யா/4681 செல்வி. குமரேஸ்வரி ஞானசுப்பிரமணியம்
யா/யா/4685 திருமதி. சேதுப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/யா/4729 திருமதி. றீற்றா புஸ்பரட்ணம் பெஞ்சமின்
யா/யா/4736 திரு. கந்தையா ஞானகணேசன்
யா/யா/4770 திருமதி. ரெஜினா பர்ணாந்து
யா/யா/4771 திரு. குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை
யா/யா/4793 திரு. தனுக்கோடி குணரத்தினம்
யா/யா/4816 திரு. சுந்தரம் திருஞானசம்பந்தர்
யா/யா/4825 திரு. வேலுப்பிள்ளை கண்ணுத்துரை
யா/யா/4831 திரு. குறுஸ்டர் யோசப் பொன்னையா
யா/யா/4853 திருமதி. கமலாதேவி சிறீனிவாசன்
யா/யா/4868 திருமதி. தனலட்சுமி கோபாலசாமி
யா/யா/4901 திருமதி. மரியம்மா அன்ரனி
யா/யா/4904 திரு. பிச்சைமுத்து செபமாலை
யா/யா/4905 திருமதி. சிசிலியா நவரெட்ணராசா
யா/யா/4914 திருமதி. மற்றில்டா பொன்தவம் அல்பிறட்
யா/யா/4918 திருமதி. புஸ்பம் சிறில்
யா/யா/ 4935 திருமதி. இரட்டினஜோதி தியாகராஜா
யா/யா/4963 திரு. விசேந்தி அந்தோனிப்பிள்ளை
யா/யா/4966 திருமதி. செபஸ்தியம்மா பத்திநாதர்
யா/யா/4971 திரு. மளக்கியாஸ் எட்வேட்
யா/யா/4980 திரு. ஆறுமுகம் தற்பரன்
யா/யா/4994 திருமதி. சரோஜினி சபாபதிப்பிள்ளை
யா/யா/5000 திரு. செல்லப்பா அப்பாப்பிள்ளை
யா/யா/5040 திரு. சுவாம்பிள்ளை சின்னராசா
யா/யா/5045 திரு. அல்பிரட் சிங்கராயர் மாட்டின்
யா/யா/5056 திருமதி. இராஜேஸ்வரி இராஜகாந்தி
யா/யா/5065 திருமதி. இரத்தினம் வேலாயுதம்
யா/யா/5079 திருமதி. மரியம்மா பேதுறுப்பிள்ளை
யா/யா/5089 திருமதி. மேரிலூர்து குணரத்தினம்
யா/யா/5104 திரு. குமார் பாலசுப்பிரமணியம்
யா/யா/5131 திருமதி. கிருஷ்ணம்மா கிருஷ்ணசாமி
யா/யா/5215 திருமதி. குணபாலலெட்சுமி சண்முகநாதன்
யா/யா/5256 திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்
யா/யா/5267 திரு. ஆசீர்வாதம் அலெக்ஸாண்டர்
யா/யா/5277 திரு. முத்தையா நமசிவாயம்
யா/யா/5322 திருமதி. நல்லம்மா குமாரசாமி
யா/யா/5330 திருமதி. கேட்றுட் வரப்பிரகாசம்
யா/யா/5337 திருமதி. சரஸ்வதி தெய்வேந்திரம்
யா/யா/5358 திரு. முத்தையாத்தேவர் சங்கரலிங்கம்
யா/யா/5359 திருமதி. மேரிறீற்றா சாந்தவதி சண்முகம்
யா/யா/5368 திருமதி. பிலோமினா அந்தோனிப்பிள்ளை
யா/யா/5372 திருமதி. மாகிறேற் ஜோசப்
யா/யா/5389 திரு. ஞானப்பிரகாசம் திருச்செல்வரெட்டிணம்
யா/யா/5432 திருமதி. யோகேஸ்வரி இராசரெத்தினம்
யா/யா/5433 திரு. எட்வேட் திரேசம்மா
யா/யா/5483 திருமதி. பிலோமினா செபமாலை

(தொடரும்...)

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கூறுவிலை கோரல்கள்

## (திகதி நீடிக்கப்பட்டுள்ளது)

**வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகட்டுவான் வீதியில் 12.475 - 145 கி.மீ. பகுதியில் சேதமடைந்த சரிவுகள் பாதையின் ஓரச்சுவர்க்கற்களை சிறிய அளவிலான உட்கட்டுமானப்புனரமைப்பிற்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதிவழங்கல்கள் மூலம் புனர்நிர்மாணம் செய்தல்.**

01. பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) மேற்குறிப்பிட்ட வேலைக்கான மூடிய கேள்விப்பத்திரங்களை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாக பெற்றுக் கொள்வார். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 16.11.2005 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும், கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு -கிழக்கு (வடக்கு) யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா காரியாலயங்களில் கிடைக்கும் கேள்விப்பத்திர படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 24.10.2005 தொடக்கம் 14.11.2005 வரை மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணமான 1750.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப்பெற்றுக்கொள்ள வேண்டும்.

02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

03. தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.
   அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் தரம் M-4அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   ஆ) கேள்விகோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியான ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல்வேண்டும்.

04. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு) அவர்களின் யாழ்ப்பாண மற்றும் கண்டிவீதி வவுனியா காரியாலயங்களில் பார்வையிடலாம்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.

06. முன்கேள்வி கோரல் கூட்டம் 10.11.2005 அன்று முற்பகல் 10.00 மணிக்கு மாகாணப் பணிப்பாளர், வடக்கு/கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.

07. மூடிஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இருபிரதிகள் பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி "செத்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல்வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின்பின் உடனடியாக பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி "செத்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவர்களது அதிகாரபு,ர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

09. மேலதிக விபரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர்/வடக்கு - கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா. தொலைபேசி இலக்கம் 024-2222826, 024-2220679, தொலைநகல் இலக்கம் 024-2222826, மின்னஞ்சல் முகவரி rdanorth @sltnet. lk மாகாணப்பணிப்பாளர்/வ-கி (வடக்கு) யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021-222 2517, தொலைநகல் இலக்கம் 021-2222517 மின்னஞ்சல் முகவரி rdapdnen @slt. lk பிரதான பொறியியலாளர் யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021-222 2968 மின்னஞ்சல் முகவரி rdaceif @sltnet. lk என்பனவற்றுடன் தொடர்புகொள்ளவும்.

மோசஸ் மரியதாஸன்,
மாகாணப்பணிப்பாளர்/வ-கி (வடக்கு)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்/வவுனியா

R.W.R பேமசிறி,
பொதுமுகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

(சி-13105)

# தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழம்

## காணி பற்றிய முக்கிய அறிவித்தல்

1. காடுகள், பற்றைக்காடுகள் அழிப்பது முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.
2. நீண்ட காலம் பராமரிப்பின்றிபற்றைக் காடாக வளர்ந்துள்ள உறுதிப் படுத்தப்பட்ட காணிக்கான ஆவணமுள்ள உரிமையாளர் பற்றைக் காட்டினை வெட்டி காணியை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பின் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினரின் எழுத்து மூலமான முன்னனுமதி பெற்ற பின்பே பற்றைக்காட்டினை வெட்டுதல் வேண்டும்.
3. அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அனுமதி பெறாது பற்றைக்காடுகளை வெட்டி அழிப்போர் மீது தமிழீழ காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.
4. காணிகள் அரசினால் வழங்கப்பட்டபோது எத்தேவைக்கென வழங்கப்பட்டதோ அத்தேவைக்கு மட்டுமே காணி பயன்படுத்தப்படல் வேண்டும். வழங்கப்பட்ட காணியை பிற தேவைக்கு பயன்படுத்த முனைவதும், விற்பனை செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும். எனினும் குறித்த காணி பிற தேவைக்கும் விற்பனைக்கும் உட்படுத் தப்படவேண்டிய அவசியம் ஏற்படின் அக்காணி சம்பந்தமாக மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை, காணிப்பகுதியுடன் நேரில் தொடர்புகொண்டு எழுத்து மூலமான முன் அனுமதி பெற்ற பின்பே காணியைப் பிற தேவைக்கு பயன்படுத்த முடியும்.
5. திட்டங்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட காணிகள் காணி உரிமை யாளர்களினால் நீண்ட காலம் பயன்படுத்தப்படாதிருந்தமையினால், அக்காணிகளை அவரது உறவினர்கள், உறவினர் அல்லாதோர் ஆட்சிப்படுத்தி வருகின்றனர். இப்படிப்பட்ட காணிகளை ஆட்சிப் படுத்தி வைத்திருப்போர் அக்காணியினை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இப்படிப்பட்ட காணியினை யாராவது விற்பனை செய்திருப்பின் அக்காணி மீள சுவீகரிக்கப்படும் இதற்கு நட்டஈடு எதுவும் வழங்கப்படமாட்டாது.
6. 5இல் காட்டப்பட்டுள்ள காணி தொடர்பில் யாராவது நீண்ட காலம் குறுகிய காலம் ஆட்சிப்படுத்தி வைத்திருப்பின் அக்காணி தொடர் பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக் சேவையுடன் தாமத மின்றித் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
7. வெளிநாட்டில் வாழ்பவர்களின் காணிகளை ஆட்சிப்படுத்தி வைத்திருப்போர் அக்காணி தொடர்பான விபரங்களுடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தாமதமின்றி தொடர்புகொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
8. குடியிருப்பதற்குக் காணி இல்லாத குடும்பங்கள் தமக்கு காணி எதுவும் இல்லை என்ற கிராம அலுவலர், அக் கிராம முன்னேற்ற சங்கம் ஆகியோரின் உறுதிப்பாட்டுக் கடிதத்துடன் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை செயலகத்துடன் தொடர்புகொண்டு குடியிருப்பிற் கான காணியை பெற்றுக்கொள்ள முடியும்.
9. இருந்த காணியை விற்றவர்கள், பிற மாவட்டத்தில், பிற கிராம அலுவலர் பிரிவில் காணி உள்ளவர்கள் நிரந்தரமான குடியிருப்புக் காணிக்கு விண்ணப்பிக்க முடியாது. நிரந்தர குடியிருப்புக்காணி பெற்றவர் அக் காணியை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்ய முடியாது. அப்படியான காணியை எவராவது விலைக்கு வாங்கு பவர்களாயின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழீழ நிர்வாக சேவை,
நடுவப்பணியகம்,
155, பாரதிபுரம்.
கிளிநொச்சி.

(சி-13107)


திருநெல்வேலியில் ஓர் புதிய உதயம்




பூமியில் புதிதாக கால்பதிக்கும் உங்கள் குழந்தையை வரவேற்க....

குழந்தைகளுக்கான
* பால்மா வகைகள்
* உடைகள்
* விளையாட்டுப்பொருட்கள்

உட்பட உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் மற்றும் தாய்மாருக்கான பொருட்களையும் ஒரேகூரையின் கீழ் அதிசயிக்கத்தக்க மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.



Mother And Baby Care
108/I,palaly Road, Thirunelvely.T.P:0717556677

(சி-13092)

# நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாண சபை
# வடக்கு கிழக்கு வீதி புனர்வாழ்வு திட்டம்
# ஐரோப்பிய குழுவினால் நிதிப்படுத்தப்பட்டது.

# வெற்றிடங்கள்

திட்டமுகாமைத்துவ காரியாலயத்தில் கீழ்க்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்:-**

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

**வயதெல்லை:-**

நேர்முகப் பரீட்சையின் போது 55 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை:-**

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுயதரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 2005.11.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (NECORD) 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்கவேண்டும். அரச திணைக்களம் / அரச கூட்டுத்தாபனங்கள் / சபைகள் என்பவற்றில் சேவையில் இருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**சம்பளம்**

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் அமைவாக 2000.12.26 திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50%மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

## கணக்குப் பதியுனர் -01 பதவி வெற்றிடம்

**கடமைகள்**

தேவையான ஏடுகளையும் மற்றும் புத்தகங்களையும் பராமரிப்பதற்கும் எல்லா கொடுப்பனவு ஆவணங்களின் பொறுப்பாளராக இருப்பதற்கும் கொடுப்பனவுகளை திறமையாகவும் சரிவரவும் செய்வதற்கும் கணக்காளருக்கு உதவியாக இருத்தல்வேண்டும்.

**தேவையான கல்வித்தகைமைகளும் அனுபவங்களும்**

- பின்வரும் தகைமைகளில் ஒன்றையாவது கொண்டிருத்தல்வேண்டும்
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்களம், கணிதம், வர்த்தகம், கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி
- க.பொ.த (உ/த) பரீட்சையில் வர்த்தகம், கணக்கியல் உட்பட புதிய பாடத்திட்டத்தின் கீழ் இரண்டு பாடங்களில் சித்தி அல்லது பழைய பாடத்திட்டத்தின்கீழ் மூன்று பாடங்களில் சித்தி
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கீட்டியல் டிப்ளோமாவில் சித்தி
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி

**தொழில்சார் தகைமைகள்**

- கணக்குப்பதியுனராக 5வருட அனுபவம்
- MS,WORD, EXCEL கணனி செயற்பாட்டில் அனுபவத்துடன் கணனியில் தனித்து கடமையாற்றும் திறன்
- ஆங்கிலத்தில் கடிதத்தொடர்பு கொள்ளும் திறன்

## முகாமைத்துவ சேவை உதவியாளர்

**தகைமைகள்**

- கீழ் குறிப்பிட்டவற்றில் ஏதாவது ஒன்றையுடைவராயிருத்தல்
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ்,சிங்களம், கணிதத்துடன் ஏதாவது இரண்டுபாடங்களில் (மொத்தம் நான்கு பாடங்களில்) திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி.
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் இரண்டு பாடங்களில் சித்தி அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் சித்தி
- ஆங்கிலத்தில் ஆற்றலும் கணனித்துறையில் பணி செய்யும் ஆற்றலும்.

## தரவு நிரற்படுத்துநர்

**தகைமைகள்**

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றையுடையவராயிருத்தல்வேண்டும்.

க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்களம், கணிதத்துடன் ஏதாவது இரண்டுபாடங்களில் (மொத்தம் நான்கு பாடங்களில்) திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி

க.பொ.த. (உ/த) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் இரண்டு பாடங்களில் சித்தி அல்லது பழைய பாடத்தித்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் சித்தி.

இத்துடன் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் பின்வரும் பகுதிகளில் கணனி பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் இருத்தல்வேண்டும்.

1. Windows Operating Systems
2. Microsoft Word
3. Microsoft Excel
4. Microsoft Access

## சாரதி பதவி

**தகைமைகள்**

i 8ஆம் வகுப்பு/ஆண்டு 9 பரீட்சையில் சித்தியடைந்தவராயிருத்தல்வேண்டும்

ii மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வாகனம் ஓட்டுவதற்கு தகுதி வாய்ந்தவர் என வழங்கிய சான்றிதழ் இருத்தல்வேண்டும்.

iii மோட்டார் வாகனங்கள் ஓடி குறைந்தது மூன்று வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

iv 5'2½" அங்குலத்திற்கு குறையாத உயரத்தை உடையவராக இருத்தல்வேண்டும்

v சிறந்த கண்பார்வை, தேகாரோக்கியம் உடையவராக இருத்தல்வேண்டும்.

vi போக்குவரத்து விதிகளை நன்கு தெரிந்தவராக இருத்தல்வேண்டும்.

த.லங்காநேசன்,
திட்டப்பணிப்பாளர்,
நீக்கோட் திட்ட காரியாலயம், திருகோணமலை.

(சி-13046)

## விசுவமடு வ. சங்கத்தினரின் கிரிக்கெட் போட்டி

# பரபரப்பிற்குக் குறைவில்லாத காலிறுதிப் போட்டிகள்!






விசுவமடு வர்த்தக சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் நேற்றைய காலிறுதிப் போட்டிகள் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்திருந்தன.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நடை பெற்றுவரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

முதலாவதாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் மாலதி விளையாட்டுக்கழகமும், தோழர்கள் விளையாட்டுக்கழகமும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மாலதி வி.கழகம் 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட் டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றது. தயாளன் ஒன்பது ஓட்டங்களையும், சூரியகுமார் எட்டு ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் தர்மேந்திரா மூன்று விக்கெட்டுக்களையும், உதயன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தோழர்கள் வி.கழகம் எட்டு ஓவர்கள் முடிவில் வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆட்டமிழக்காது தினேஷ், சுகிர்தன் முறையே 22, 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து இளந்தாரகை ஏ அணிக்கும், வித்தியா ஏ அணிக்கும் இடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வித்தியா ஏ. வி.கழகம் முதலில் களத்தடுப்புச் செய்யத் தீர்மானித்தது. இதற்கு அமைய களமிறங்கிய இளந்தாரகை ஏ வி.கழகம் 14.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மிகவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய யோகீசன், பிரகாஷ் தலா 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திருக்குமாரன் மூன்று விக்கெட்டுக்களையும், சரவணன், சுபாஸ்கரன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய வித்தியா ஏ வி.கழகத்தின் ஆரம்பம் சிறப்பானதொன்றாக அமைந்தாலும் இறுதியில் 14.5 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் விஜிதரன் 28 ஓட்டங்களையும், சுபாஸ்கரன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாந்தன், சுகந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் கிருஸ்ணபாரதி வி.கழகத்திற்கும், புதியதாரகை வி.கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கிருஸ்ணபாரதி வி.கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துஷ்யந் தன் 15 ஓட்டங்களையும், பிரபுராஜ் 12 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்து வீச்சில் குகநாத் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

66 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய புதியதாரகை வி.கழகம் 14.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இதில் குகதாசன் 13 ஓட்டங்களையும், குகநேசன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் குகராஜ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

நேற்று கடைசியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கனகபுரம் வி.கழகத்திற்கும், இளந்தாரகை பி. வி.கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கனகபுரம் வி.கழகம் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரதீபன் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுரேந்திரன் மூன்று விக்கெட்டுக்களையும், செல்வரஜீவன் இரண்டு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இளந்தாரகை பி. அணி ஆரம்பத்தில் தொடராக விக்கெட்டுக்கள் வீழ்ந்தபோதும் ஏழாவது விக்கெட்டுக் காக இணைந்த செல்வரஜீவனின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் 14.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது. இதில் செல்வரஜீவன் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சிவதாசன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் காண்டீபன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக குமார், சுபானந் ஆகியோர் கடமையாற்றினர். இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு




முத்துஐயன்கட்டு வலது கரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளை யாட்டு மைதானத்திற்கு அன் பழகன் (வசந்தன்) என்பவரால் இருபத்திரண்டாயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் அன் பளிப்பாக வழங்கப்பட்டுள் ளது. (05)

## பழைய பாணியில் ஆடி பரவசப்படுத்தினார் சச்சின்



(பெங்களூர்)

இந்தியா-இலங்கை கிரிக் கெட் அணிகள் இடையே முதலாவது ஒருநாள் போட்டி 25ஆம் திகதி நாக்பூரில் நடை பெற இருக்கிறது. இதற்கு தங்களை தயார்படுத்தி கொள் வதற்காக இந்திய வீரர்கள் பெங்களூரில் மூன்று நாள் பயிற்சி பெற்றார்கள். இந்த பயிற்சி முகாம் நேற்று நிறைவு பெற்றது.

இந்திய வீரர்கள் இரு அணிகளாக பிரிந்து 50 ஓவர் அடிப்படையில் பயிற்சிப் போட்டியில் ஆடினார்கள். அதில் டெண்டுல்கர் அருமையாக துடுப்பெடுத்தாடினார். அவருடைய பழையபாணியிலான ஆட்டத்தை பார்த்து எல்லோரும் பரவசப்பட்டார்கள். பந்துவீச்சாளர்களின் பந்துகளை அடிக்கடி அவர் எல்லைக் கோட்டுக்கு அனுப்பிய வண்ணம் இருந்தார். 60 ஓட்டங்களை சீக்கிரமாக எடுத்தார்.

டெண்டுல்கரின் ஆட்டத்தை பார்த்த பயிற்சியாளர் கிரேக் சப்பல் மிகவும் மகிழ்ச்சியடைந்து பாராட்டுத் தெரிவித்தார். டெண்டுல்கர் மிகச் சிறப்பாக ஆடியது எனக்கு மிகுந்த சந்தோசத்தை கொடுத்தது. அவர் பழைய நிலைக்கு திரும்பிவிட்டார். முழு உடல்தகுதியும் பெற்றுவிட்டார். பயிற்சி முகாம் 'நடந்த மூன்று நாட்களிலும் அவருடைய செயற்பாடு நன்றாக இருந்தது. பொதுவாக இந்திய வீரர்கள் எல்லோருமே நன்கு ஆடுகிற திறனோடு இருக்கிறார்கள். இது எனக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது'' என்று சப்பல் கூறினார்.

முகமது கைப், அனில்கும்ப்ளே இருவரும் காயம் காரணமாக இந்திய அணியில் இடம்பெறாததை பற்றி சப்பல் குறிப்பிடும் போது "இப்போது அந்த இரண்டு வீரர்களும் நன்கு குணமடைந்து வருகிறார்கள். அவர்கள் மீண்டும் அணியில் இடம்பெற சிறிது இடைவெளிதான் இருக்கிறது'' என்று தெரிவித்தார்.

## சூரிச் ஓபன் டென்னிஸ் காலிறுதியில் டேவன்போர்ட்

சூரிச்ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெ ரிக்க வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட் காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

சூரிச் ஓபன் டென்னிஸ் போட்டி சுவிட் சர்லாந்தில் நடந்து வருகிறது. இதன் பெண் கள் ஒற்றையர் இரண்டாவது சுற்று ஆட்டத் தில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட் (அமெரிக்கா), சுலோவக்கியா வீராங்கனை டானிலா ஹன்ட்டு சோவாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் டானிலா முதல் இரண்டு செட்டுகளில் ஆதிக்கம் செலுத்தினார். பின்னர் சுதாகரித்து ஆடிய டேவன் போர்ட் 3-6,7-5,6-2 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்றுகாலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் வீராங்கனை அமெலி மவுரெஸ்மோ 6-2,6-0 என்ற நேர்செட்டில் சுலோவக்கியா நாட்டு வீராங்கனை காதரினாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்ததார்.

இன்னொரு ஆட்டத்தில் இத்தாலி வீராங்கனை பிரான்செஸ்கோ 3-6,6-2,7-6, (7-3) என்ற செட்கணக்கில் ரஷ்ய வீராங்கனை நாடியா பெட்ரோவாவை வீழ்த்தி காலி றுதிக்குள் அனாவெற்றி. மற்ற ஆட்டங்களில் பிளாவியா பெனட்டா (இத் தாலி), பிரான் செஸ்கா (செர்பியா) ஆகியோர் தங்களது இரண்டாவது சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு முன்னேறினார்கள்.

## மூன்றாவது போட்டியில் கங்குலி; இந்.கிரிக்கெட் சபையே முடிவு செய்யும்

### இந்திய அணி பயிற்சியாளர் சப்பல்





இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி முழங்கையில் ஏற்பட்ட காயம் மற்றும் மோசமான ஆட்டம் காரணமாக சிறிலங்கா அணிக்கு எதிரான முதல் இரண்டு போட்டிகளில் சேர்க்கப்படவில்லை.

இதையடுத்து கங்குலி உடல் தகுதியை நிரூபித்து துலீப் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாடி வருகின்றார். இப்போட்டியில் அவர் சதம் அடித்தார். இதன் மூலம் கங்குலி சிறிலங்கா அணிக்கு எதிரான மூன்றாவது போட்டியில் இந்திய அணியில் இடம்பெறுவார் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் சப்பல் கங்குலி அணியில் இடம்பெறுவதை கிரிக்கெட் சபைதான் முடிவு செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, சிறிலங்கா அணிக்கு எதிரான முதல் இரண்டு போட்டிகளில் விளையாடும் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. கங்குலியை அணியில் சேர்ப்பது குறித்து கிரிக்கெட் சபைதான் முடிவு செய்ய வேண்டும். இது தொடர்பாக எந்தவித கருத்தும்கூற விரும்பவில்லை.

தேர்வாளர்கள் விடயத்தில் நான் தலையிடுவதில்லை. சிறிலங்கா தொடருக்கு எதிரான பயிற்சி முகாம் சிறப்பான முறையில் அமைந்தது. இதில் வீரர்கள் அனைவரும் நல்ல முறையில் செயற்பட்டனர்.

அவர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் போட்டியை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளனர். இத்தொடரில் வெற்றிபெற புது வியூகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கேரளாவைச் சேர்ந்த புதுமுக வீரர் ஸ்ரீசந்த் தொடக்க பந்து வீச்சாளராக களம் இறங்குவார். எனினும் சூழ்நிலைக்கு தகுந்தவாறு முடிவு எடுக்கப்படும்.

யுவராஜ்சிங்கும், முரளி கார்த்திக்கும் கடைசி இரண்டு நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். மற்றபடி பயிற்சி முகாம் மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. ராவிட்டும் சேவாக்கும் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டியில் சிறப்பாக ஆடவில்லை. அந்த தொடரில் உலக 11 பேர் வீரர்கள் யாருமே நன்றாக ஆடவில்லை. இனிவரும் ஆட்டங்களில் இருவரும் சிற்ப்பாக ஆடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு சப்பல் கூறினார்.

## நியூசிலாந்து தென்னாபிரிக்காவை 20 : 20 போட்டியில் தோற்கடித்தது




ஜோகனஸ்பர்க்கில் நேற்று முன்தினம் நடை பெற்ற இருபதுக்கு இரு பது ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி தென்னாபிரிக்க அணியை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் பிளெமிங் முதலில் களத்தடுப்புச் செய்யத் தீர்மானித்தார். இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 19.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் தலைவர் கிரகம் ஸ்மித் சிறப்பாக ஆடி 61 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஜெக்கலிஸ் 20 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். ஷோன் பொலக் ஓட்டம்பெறாமல் ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் ஆஸ்லே, ஜீவன்பட்டேல் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும், ஷேன் பொன்ட் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற் றினர்.

பதிலுக்கு 134 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய நியூசிலாந்து 18.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அவ்வணியின் தலைவர் பிளெமிங் 31 ஓட்டங்களையும் ஸ்டைரிஸ் 24 ஓட்டங்களையும், ஜேக்கப் ஓரம் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அன்ரு நெல், லோங்வெலட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரகம் ஸ்மித் தெரிவானார்.

## சிந்தனைக்கு



மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போது தான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## முன்னெச்சரிக்கை!

நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் ஒரு மணி நேரம் நீடித்த மழை வீழ்ச்சியானது கிளிநொச்சி நகர்ப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மாரிகாலத்தில் சில தினங்களீ அன்றி சில மணித்தியாலங்கள் மழை நீடிப்பின் ஏற்படக்கூடிய அபாயத்தை எச்சரிக்கை செய்வதாகவே இருந்தது.

நேற்றைய முன்தினம் மழைவீழ்ச்சியானது சொத்துக்களுக்கும், உடமைகளுக்கும் பெரும் சேதம் எதையும் விளைவிக்காது விடினும், மழை நீரானது பல இடங்களில் வீதியை மேவிப்பாய்ந்தது. சில இடங்களில் வீதியின் இரு மருங்கிலும் தேங்கி நின்றது. நகரின் சிலஇடங்களில் வர்த்தக நிலையங்களுக்குள்ளும் புகுந்தது.

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நீண்டகாலத்திற்குப் பின்னர் சில அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இதன் ஒரு அங்கமாக வீதிப்புனரமைப்பு மற்றும் கட்டட நிர்மாணங்கள் என்பன முக்கிய நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிப்புனரமைப்பு பணிகளின்போது வீதிகள் சற்று அகலமாகவும், 'கிரவல்' கொட்டப்பட்டு உயர்தப்பட்டதாகவும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தற்பொழுது பெய்த மழையினால் முதலில் அச் சுறுத்தலுக்குள்ளாகியுள்ளவை இத்தகைய வீதிகளே ஆகும்.

அதாவது வீதிகள் புனரமைப்பு பணிகள் பாரிய நெருக்கடிகளின் பின்னர் மேற்கொள்ளப்படுவதாக இருக்கும் அதேவேளை, அமைக் கப்படும் வீதிகளைப் பாதுகாக்கும்.வகையில் குறிப்பாக வடிகால்கள் அமைக்கப்படுகின்றவா என்பது கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது.

குறிப்பாக மழைவீழ்ச்சி ஏற்பட்டதும் வடிகால்கள் சீரின்மைகாரணமாக பெருமளவு வெள்ளம் வீதிகளை குறுக்கறுத்துப் பாய்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய நிலை நகர்ப் பகுதியில் இருந்து உள்ளோக்கிச் செல்லும் வீதிகளில் மட்டுமல்ல பிரதான வீதிகளிலும் (ஏ-9) காணப்படுவதாகவே உள்ளது.

அடுத்ததாக வீதிகளின் ஒரங்களில் வடிகால்கள் சீரற்றிருப்பதினால் பல இடங்களில் வீதிகளின் இருமருங்கிலும் வெள்ளம் தேங்கி நிற்பதோடு, வீதிகளுக்கு அண்மையாகவுள்ள வர்த்தக நிலையங்கள், குடியிருப்புக்கள் என்பன வற்றிற்குள் புகுந்து விடுகின்றன. இதனால் ஒரு புறத்தில் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதோடு இன்னொரு புறத்தில் சுகாதாரச் சீர்கேடுகளும், ஏற்படுகின்றன. குறிப்பாக வீதிகளில் உள்ள குப்பை கூழக் கழிவுகளை வர்த்தக நிலையங்களுக்குள் கொண்டு வந்து விடுகின்றன. அத்தோடு அத்தகைய இடங்களில் நீர் அதிகளவு வந்து சேருகையில் அவ் வீதியைக் கடந்தும் பாய்கின்றது.


இவை ஒருபுறம் இருக்க புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகளில் மேற்கொள்ளப்பட்ட வடிகால் அமைப்புக்களும் குறிப்பாக மதகுகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு புறத்தில் காட்டுமானங்களில் உறுதிப்பாடு காணப்படாததோடு மறுபுறத்தில், நீர்வழிந்தோடுவதற்கு ஏற்றமுறையிலும் அவை அமைக்கப்பட்டதாகவும், தெரியவில்லை. சிலவேளை வடிகால்கள் சீர்படுத்தப்படின் அவை சரியாகலாம்.

ஆகையினால் எதிர்வரும் மாரி காலத்தில் மிகவும் நெருக்கடிகள், சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியதாகவே இருக்கும் இத்தனைக்கும் இவ் அடிப்படைக்கட்டுமாணப்பணிகள் நன்கு திட்டமிட்ட ரீதியிலும்உறுதிப்பாடானதாகவும் மேற் கொள்ளப்படுதல் வேண்டும். ஏனெனில் இக்கட்டுமானப்பணிகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுபவையும் அல்ல அதற்கான வசதிகளும் இருப்பதாக இல்லை.

அத்தோடு இவ் அடிப்படைக்கட்டுமானப்பணிகளோ அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமையக்கூடியவையாகும் ஆகையினால், இக்கட்டுமானப்பணிகள் துரித கதியில் மேற் கொள்ளப்படுதல் வேண்டும் என்பது மட்டுமல்ல, அவை நீண்ட கால நோக்கில் அமையவேண்டும் என்பதே அவசியமானதாகும் இதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பினும், மேற கொள்ளப்படும் நடவடிக்கைகளாவது பொருத்தப்பாடானதாக இருத்தல் வேண்டும்.

மேலும் செப்பனிடப்பட்ட வீதிகளின் வடிகால்கள் மட்டுமல்ல செப்பனிடப்பாத வீதிகளின் ஓரங்களில் உள்ள வடிகால்களிலும், கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகவே உள்ளது. ஏனெனில் செப்பனிடப்படாத வீதிகள் தற்பொழுது நீரோடும் வாய்க்கால்கள் போன்றே உள்ளன. இதனால் வீதிப்போக்குவரத்தில் பெரும் இடையூறுகள் ஏற்படுவதோடு வீதி விபத்துக்களுக்கும் அவை காரணமாகியுள்ளன.

இவை குறை கூறும் நோக்கிலோ குற்றம் சாட்டும் நோக்கிலோ கூறப்பட்டவையல்ல. கிளிநொச்சி நகரமும் அதைச் சூழவுள்ள இடங்களும் எதிர் கொள்ளும் நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டும் நோக்கிலானவையே. நிதி ஒதுக்கீடுகள் அபிவிருத்திப் பணிகளுக்குப் போதாமை அபிவிருத்திப் பணிகள் தாமதமாவதற்குக் காரணமாக இருப்பினும், கிடைக்கப்பெறுபவற்றை பயன்படுத்தும் போது அவற்றிற் கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதாகும்.




# தன்னிறைவான பொருளாதாரமே தேசியத்தலைவரின் எதிர்பார்ப்பு

**-தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன்-**

எமது தேசியத்தலைவரின் எதிர்பார்ப்பு மக்கள் தன்னிறைவான பொருளா தாரத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதேயாகும், என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கிராமிய அபிவிருத்தி வங்கியின் சேமிப்பு வாரம் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடு பற்றிய ஊடகவியலாளர்களுக்கான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்தக் கிராமிய அவிருத்தி வங்கியினுடைய செயற்திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்திற்கு சேமிப்புவாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு மக்களை கிராமிய அவிருத்தி வங்கியில் சேமிப்பாளர்களாக இணைத்துக் கொள்ளும் முயற்சியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆற்றல்கள் இருந்தும், நிலம் இருந்தும் செய்கை பண்ண முடியாத விவசாயிகளை இனம் கண்டு அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம், அந்த உதவியைக் கொண்டு எமது தேசியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி சுய பொருளாதார நிலைக்கு அவர்களைக் கொண்டு வருவதற்கு ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு இந்த வங்கி முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எமது தேசியத்தலைவரினுடைய எதிர் பார்ப்பு நாங்கள் தன்னிறைவான பொருளாதாரத்தை கொண்டவர்களாக இருக்கவேண்டுமென்பதே. அதற்கேற்ப இந்த வங்கியின் செயற்பாடும் அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது.

இந்தப் பிரதேசத்திலே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலே அரச வங்கிகளில் இருந்து விவசாயக் கடன்களை வழங்குவதற்கு நாடளாவிய ரீதியில் சில விதிமுறைகளை வைத்து கடன்களை வழங்கியிருந்தாலும் எமது தமிழீழப் பிரதேசத்திலே அந்த வங்கிக்கடன்களுக்கு அனுமதி இல்லாத நிலை இருந்தது. இருந்தும் 1993-1994 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முன்னின்று வங்கிகளில் கடன்களைப்பெற்று விவசாயிகளுக்கு வழ்ங்கியது. அதனை மீளச் செலுத்துவதிலும் நூறு வீத வெற்றி கண்டிருந்தது. இவ்விடயம் சிறிலங்கா பாராளுமன்றில் கூட சிறப்பாகப் பேசப்பட்டது.

இருப்பினும் தமிழ் மக்களுக்காக ஒரு வங்கியை உருவாக்கி அதனூடாக மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு அமைவாக ஆரம்பத்தில் ஒரு வங்கி ஆரம்பிக்கப்பட்டது. அது இன்று தமிழீழப் பிரதேசத்தில் 10 கிளைகளைக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக விவசாயிகளுக்குத் தேவையான நிதி வளங்களையும், உள்ளீடுகள்,கிருமிநாசினிகள், உழு பொறிகள் எல்லாவற்றிற்கும் இவ்வங்கி கடனடிப்படையில் உதவிக் கொண்டு வருகின்றது. இந்தக்கிராமிய அபிவிருத்தி வங்கியின் செயற்பாடுகள் மிகவும் பின்தங்கிய அடிமட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகின்ற நோக்கத்தைக் கொண்டே செயற்படுகின்றது. அவர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை உருவாக்குவதன் மூலம் எதிர் காலத்திற்கு ஒரு நிலையான அத்திவாரம் அமைகின்றது.

அத்தோடு கல்விகற்கும் மாணவர்களுக்கு சூரிய மின்கலங்கள் கடனாக வழங்கப்படுகின்றது என அவர் தெரிவித்தார். நேற்று முற்பகல் 11 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இவ் வங்கிதொடர்பான ஊடகவியலாளர் மாநாட்டில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர், வங்கி மேலாளர்மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். (ச.தீ)

# அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு இனக் கலவரங்களுக்கு முஸ்லிம்களே காரணம் என்று கருத்துத் தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின பாராளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரருக்கு எதிராக நாடு தழுவிய கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அறிவீத்துள்ளது.

முஸ்லிம் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் ஊடகவியலாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

சிரச தொலைக்காட்சியில் கடந்த ஒக்ரோபர் 13 ஆம் நாள் பேசிய அத்துரலியரத்னதேரர் முஸ்லிம்களை அவமதிக்கும் கருத்துக்களை வெளியிட்டார்.

1983 ஆம் ஆண்டு யூலை தமிழர் படுகொலைகளுக்கு முஸ்லிம் களே காரணம் என்றும் குற்றம் சாட்டினார். இதற்குக் கண்டனம் தெரி வித்து நாடு தழுவிய அளவில் கண்டனப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தேர்தல் களம் இரு முகாம்களாகத்தான் உள்ளது. இன வாதிகள் மகிந்த ராஜபக்ஷ தலை மையிலும் இனங்களுக்கு இடையே சமத்துவத்தை வலியுறுத்துவோர் ரணில் தலைமையிலும் அணி சேர்ந்துள்ளனர். அத்துரலிய ரத்ன தேரரின் கருத்துக்கள் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உரிய விளக்கம் அளிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செய்தி ஆசிரியர் நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் வானொலியான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தி ஆசிரியர் ராஜகடுகம் பொல நீக்கப்பட்டுள்ளார். பிரதமர் ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சி செய்திகளுக்கு அரச வானொலி முன்னுரிமை அளிக்கவில்லை என மகிந்த ராஜபக்ஷ தரப்பிலிருந்து புகார் கூறப்பட்டு வந்தது. ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் செய்திகளுக்கு அதிக முன்னுரிமை கொடுப்பதால் தான் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தி ஆசிரியரை அதன் இயக்குனர் ஹட்சன் சமரசிங்க நீக்கியுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை தமிழ்தேசிய எழுச்சி நிகழ்வில்....



## யாழ்.மாவட்ட மக்கள்படை கட்டுமான ஆறாவது அணி பயிற்சி நிறைவு


(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மக்கள் படை கட்டுமானத்தின்ஆறாவது பயிற்சி அணி தனது பயிற்சியை நிறைவு செய்துள்ளது.

நேற்றுமாலை 6.00 மணியளவில் இந்த அணி தனது பயிற்சியை நிறைவு செய்தது.

தமிழீழமெங்கும் மக்கள் படைகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் மக்கள்படை கட்டுமானப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.





## வேறொரு வானூர்தியின் தாக்குதலிலேயே உளவு வானூர்தி வீழ்ந்து நொருங்கியதாம்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கனகராயன்குளத்திற்கு அண்மையாகவுள்ள விஞ்ஞானகுளப் பகுதியில் வீழ்ந்து நொருங்கிய உளவு வானூர்தி வேறொரு வானூர்தியின் தாக்குதலுக்குள்ளாகியே வீழ்ந்திருக்கலாம் என சிறிலங்கா வான்படை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

குறித்த வானூர்தி இயந்திரக் கோளாறு காரணமாகவே விபத்திற்குள்ளாகி வீழ்ந்து நொருங்கியதாக சிறிலங்கா அரசு அறிவித்திருந்தது.ஆனால், இந்த வானூர்தி ஒருமணி நேரத்திற்கு மேலாக வானில் பறந்துள்ள போதும், இயந்திரக் கோளாறிற்கான முறைப்பாடுகள் எவையும் கிடைக்கவில்லை எனத்தெரிவித்திருக்கும் சிறிலங்கா வான்படை, எனவே இந்த வானூர்தி மற்றொரு வானூர்தியின் தாக்குதலுக்குள்ளாகியே வீழ்ந்து நொருங்கியிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளது.

## மகிந்தவின் இனப்பிரச்சினை தீர்வானது இனக்கலவரத்தை அடிப்படையாகக்கொண்டது

### -புதிய இடதுசாரி முன்னணித் தலைவர்

மகிந்தவின் சிந்தனையில் உள்ள இனப்பிரச்சினைத் தீர்வானது 1983 இனக் கலவரத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழ் மக்களைக் கூட்டாகப்படுகொலை செய்யும் திட்டமே இது என்று புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் பண்டாரநாயக்கவினதோ றோகண விஜேவீரவினதோ சிந்தனை அல்ல. விஜேவீர சமத்துவத்தையும், சமூகப் புரட்சியையும் வலியுறுத்தினார். அந்த சிந்தனைகள் எதுவும் இதில் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

### வல்வெட்டித்....

தேசியத் தலைவர் பிறந்த மண்ணில் இருந்து எமது தலைநகரம் திருமலையில் இடம்பெறும் இந்த எழுச்சி நிகழ்வைக் கண்களால் காண வேண்டும் என்ற பேரவாவினாலேயே நாங்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம். நாம் நேற்று முன்தினம் காலை வல்வை ஊரில் இருந்து ஆறு பேராகத் திருமலை நோக்கிய எமது மிதிவண்டி எழுச்சிப்பயணத்தை ஆரம்பித்தோம். எம்முடன் வந்தஒருவர் கிளிநொச்சியில் ஏற்பட்ட சிறியவிபத்துக் காரணமாக அங்கேயே தங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இருந்த போதிலும் நாம் ஐவரும் எமது பயணத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம்மாலை ஏழு மணியளவில் வவுனியாவை அடைந்து வவுனியாவில் தங்கி மீண்டும் அதிகாலை 5.45 மணிக்கு திருமலை நோக்கி எமது பயணத்தைத் தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் அரங்கத்தை நாம் அடையவும், எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப் படவும் சரியாக இருந்தமை எங்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கின்றது எனத் தெரிவித்தனர்.

இந்த ஐவரும் நேற்று ஒரே வகையான சீருடையில் அரங்கிற்குசென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### திருமலை...

பின்னர் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர்கள் க. பத்மநாதன், ந. ரவிராஜ், க. துரைரட்ண சிங்கம், செல்வம் அடைக்கலநாதன், க.தங்கேஸ்வரி, இரா சம்பந்தன் ஆசிரியர் சார்பில் ஆர்.ஜெரோம், திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ. விக்னேஸ்வரன். எஸ். கௌரி முகுந்தன், மகளிர் அமைப்பின்தலைவி கண்மணி இரத்தினவடிவேல், சமாதான நீதவான் சாகுல் ஹமீது,எஸ். கௌரிமுகுந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

தேசிய எழுச்சிப்பிரகடனத்தை மனித உரிமை ஆர்வலரான சட்டத்தரணி கா. சிவபாலன் வாசித்தார். அப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எழுந்து நின்று கைகளை மேலே உயர்த்தி உறுதி எடுத்துக் கொண்டனர். (25)

### தமிழர்களை...

அவர்அங்கு மேலும் உரையாற்றுகையில், நாம் இதுவரை இழந்தவைகளை ஈடு செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வு வராது போனால், சர்வதேச சட்டப்படி எமது சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரித்து சர்வதேசம் எமக்கான உரிமைகளை வழங்கவேண்டும். சர்வதேச சட்டப்படி ஒரு இனத்தின் உரிமைகள் வழங்கப்படாது தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டால் தமக்குரிய சுயநிர்ணய உரிமைகளை நிலைநாட்டி சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதே ஆகும். [illegible] சுயநிர்ணய உரிமைகளை நாமே அமைத்துக் கொள்ள நாம் எல்லோரும் ஓரணியாக, ஒற்றுமையாக ஒரே குடையின் கீழ் அணிதிரள வேண்டும். எமது அரசியல் இராணுவ பலத்தின் முன் எம்மை யாராலும் ஏமாற்றிவிட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

### போர்நிறுத்த...

தற்போது நடைமுறையில் இரவு ஏழு மணிக்கு முன்னதாக கடலிற்குச் செல்லும் மீனவர்கள் அடுத்தநாள் காலையிலேயே வீடு திரும்பமுடியுமென படையினர் நிபந்னை விதித்துள்ளனர்.எனினும்சுனாமி,கடல் கொந்தளிப்பு அச்சம் காரணமாக இடையில் மீனவர்கள், கரைதிரும்புவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென மீனவ அமைப்புக்கள் இச்சந்திப்பில் வலியுறுத்தினர்.

அத்துடன் கடந்த 20 வருடங்களிற்கு மேலாக இயங்காதுள்ளதுடன், தற்போது படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பருத்தித்துறை, காங்கேசன்துறை,காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறையின்கோவளம் வெளிச்சவீடுகளை மீள இயக்க வேண்டுமெனவும் கோரப் பட்டுள்ளது. தற்போது ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் வெளிச்சவீடுகள் தேவை தொடர்பாக இச் சந்திப்பில் பெரிதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தென்னிலங்கைக்கு வியாபார நடவடிக்கைகளிற்காக எடுத்துச் செல்லப்படும் மீன்கள் படையினரது சோதனை கெடுபிடிகளால் சேதமடைந்து வருவதாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டிற்கு பதிலளித்த இராணுவத்தளபதி யாழ்.நகரப்பகுதியிலும்.வடமராட்சியிலும், தெரிவு செய்யப்பட்ட ஓரிடத்தில் படையினரது நேரடியான சோதனை நடவடிக்கைகளின் கீழ் மீன்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்து தருவதற்குச் சம்மதம் தெரி வித்ததாக மீனவசங்கப் பிரதிநிதிகள்தெரிவித்தனர். (27)

### ஏ9 இல்...

உந்துருளியிலிருந்து தூக்கிவீசப்பட்டு காயங்களுக்குள்ளான நிலையிலிருந்த இருவரும் உடனடியாக கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சிகிச்சைக்கென அனுமதிக்கப்பெற்றபொழுது வைத்தியசாலையில் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றையவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் தற்போது மாவட்டவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உந்துருளியின் பின்னால் இருந்து பயணித்த கிளிநொச்சி 2ஆம் பகுதி திருவையாற்றைச் சேர்ந்த கந்தசாமி வினோத்ராம் (வயது-23) என்பவரே இச் சம்பவத்தில் மரணமானவராவார். உந்துருளியை ஓட்டிச்சென்ற கிருஸ்ணபிள்ளை ராகுலன் (வயது-24) என்பவரே பலத்தகாயங்களுக்குள்ளானர்.

கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் கனிமொழி வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சம்பவ இடத்தையும் நேரில் சென்று பார்வையிட்டு காவல் துறையினருக்கு மேலதிக விசாரணைக்கு உத்தரவிட்டார்.

மற்றைய விபத்து முதலில் இடம்பெற்ற இடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. பாரவூர்தியும், மக்கள் பேருந்தும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் இருவாகனத்தினதும் முன பகுதிகள் பலத்தசேதத்திற்குள்ளானதுடன் பாரவூர்தி வீதியை விட்டு விலகி வீதியின் ஓரமாக காணப்பட்டது. இச்சம் பவத்தில் இருவாகனச் சாரதிகளும் சிறுகாயங்களுக்குள்ளாகினர் ஸ்தலத்திற்கு விரைந்த தமிழீழ நகரவீதிப்போக்குவரத்து காவல்துறையினர் விபத்துக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டனர். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.